**இலங்கை துறைமுக அதிகார சபையின் மற்றும் அதன் துணைக் கம்பனிம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதிக்கூற்றுக்கள் ("அதிகார சபை") மற்றும் அதிகார சபையினதும் அதன் துணைக் கம்பனியினதும் ("தொகுதி") ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து அதிகார சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பொதுத்துறை தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமம் இலக்கம் 13 இன் (SLFRS 13) 76 ஆம் பிரிவிற்கு இணங்க ஏனைய விபரமான வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியால் அளவிடப்படுகின்ற நிதிச் சொத்துக்களை இனங்காணும் போது முதலாவது மட்டத்தின் (Level 01) கீழ் வகைப்படுத்துவதற்காக செயற்படும் ஒரு சந்தை விலை காணப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் 2.5.4 ஆம் பிரிவிற்கு இணங்க சந்தை விலை இல்லா வெஸ்ட் இட்ட நெசனல் டேர்மினல் கம்பனி (Colombo West International Terminal Pvt. Ltd) முதலாவது மட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கொழும்பு வெஸ்ட் இன்டர்நெசனல் டேர்மினல் கம்பனி (CWIT) இன் நியாயமான பெறுமதி அளக்கப்படுகின்ற நிதிச் சொத்துக்களை இனங்காணும் போது மூன்றாம் மட்டத்தின் கீழ் (Level 03) வகைப்படுத்துவதன் மூலம் சரிசெய்தல் செய்யப்படும். | நியமத்தின் பிரகாரம் உரிய மட்டத்தின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் (LKAS 16) 51 ஆம் பிரிவிற்கு இணங்க நிலையான சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதியை வருடாந்தம் மீளாய்வு செய்து வித்தியாசம் ஏற்பாடுமாயின் அந்த வித்தியாசம் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் கணக்குகளில் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் காலி துறைமுகத்திடம் காணப்பட்ட இயலளவு பெறுமதி ரூபா 4,365 மில்லியனான 11 வகையைச் சார்ந்த சொத்துக்களை மீளாய்வு செய்து கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலி துறைமுகத்தில் இயந்தி செயற்பாட்டு மற்றும் கடல்சார் பிரிவில் காணப்பட்ட சொத:துக்களின் மதிப்பீட்டிற்காக செயற்பாட்ட முகாமையாளர் இயந்திர பொறியியலாளர் பிரதி ஹாபர் மாஸ்டர் (காலி) ஆகிய உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் காலி துறைமுகத்தின் சொத்துக்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் அதன்அறிக்கையை பெற்றதான் பின்னர் உரிய தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட் காலத்தை வருடாந்த மீளாய்வு செய்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 21 (LKAS 21) இன் 21 ஆம் பரிவின் பிரகாரம் வெளிநாட்டுப் பணத்திலான கொடுக்கல் வாங்கல்களானது கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட குறித்த நேர நாணயமாற்று (Spot Rate) | இணங்கிக் கொள்ளப்படவில்லை துறைமுக அதிகார சபையின் கட்டண ஆவணம் (Port Tariff) அமெரிக்க டொலர் (USD) பண அலக்கிற்கு இணங்க தயாரிக்கப்பட்படிருந்ததுடன் | அதிகார சபையினால் வருமானங்களை இனங்காணும் போது குறித்த நேரத்தின் நாணயமாற்று விகிதத்தில் கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | விகிதத்தினை ஈடுபடுத்தி உள்நாட்டு பணத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகார சபையினால் வருமானங்களை இனங்காணும் போது குறித்த நேர நாணயமாற்று விகிதத்தில் கொள்வனவு செய்யும் விகிதத்தினை (Buying Rate) ஈடுபடுத்துவதற்குப் பதிலாக அதிக பெறுமதியுடன் விற்பனை விகிதத்தினை (selling Rate) ஈடுபடுத்துவதனால் அதிகார சபையின் வருமானம் கூடுதல் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக கட்டணத்தை தயாரித்து இறுதியில் அமெரிக்க டொலரில் விற்பனை விகிதத்தின் பிரகாரம் உள்நாட்டு பண அலக்கிற்கு பரிமாற்றம் செய்யப்படும். துறைமுக அதிகார சபையின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கான இன்வொயிஸ்களை உள்நாட்டு பண அலகிற்கு பரிமாற்றம் செய்வதற்கு அமெரிக்க டொலரின் விற்பனை விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு கணித்தல் நீண்டகாலமாக பின்பற்றப்பட்ட நடைமுறையாக இருந்ததுடன் அதற்காக உள்நாட்டு கப்பல் முகவர் நிறுவனங்கள் அவர்கள் தோற்றுவித்துள்ள அமைப்புக்கள் (CASA, SLAVO) போன்ற நிறுவனங்கள் அல்லது முகவர்களின் தலைமையகங்கள் (Principals) எந்த சந்தர்ப்பத்திலும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | செய்யும் விகிதத்தினை (Buying Rate) ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 21 இன் (LKAS 21) 23(அ) பிரிவிற்கு இணங்க விற்பனை காலப்பகுதியின் இறுதியில் வெளிநாட்டு பணத்திலான நிதிச் சொத்துக்களை இனங்காணும் போது அறிக்கையிடும் காலப் பகுதியின் இறுதித் திகதியில் காணப்பட்ட ''இறுதி நாணயமாற்று விகிதம்'' (Closing rate) பயன்படுத்தப்பட்டு உள்நாட்டுப் பணத்திற்கு பரிமாற்றம செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் பெறுமதியை அறிக்கையிடும் போது ஒவ்வொரு கடன்பட்டோரின் தீரத்துவைக்கப்படாத விலைப்பட்டியல்களின் ரூபா பெறுமதியானது விலைப்பட்டியல் திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிகதத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக கடன்பட்டோர் பெறுமதி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலைமையை வெளிப்படுத்தவில்லை. | இணங்க வில்லை. கணக்கு மீதிகள் அறிக்கையிடுகின்ற 2022-12-31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதிகளானது இறுதி நாணயமாற்று விகித்தனை அடிப்டையாகக் கொண்டு கணக்கு வைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற இன்வொயிஸ்களை கவனத்திற்கு எடுத்துக்கொள்கின்ற போது அது நடைமுறையில் செய்ய முடியாதவையாகும். மேலும் புதிய முகவர்களுடன் உரிய மீதிகள் சம்பந்தமாக இணங்கிக் கொள்ளப்பட்டுள்ள Out standing Balance யை மாற்றுதல் சய்ய முடியாததாகும். | நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு காலப் பகுதியின் இறுதியில் வெளிநாட்டு பணத்திற்கான நிதிச் சொத:துக்களை இனங்காணும் போது அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் ''இறுதியான நாணயமாற்று விகிதம்'' (Closing rate) பயன்படுத்தப்பட்டு உள்நாட்டு பணத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 28 இன் (LKAS 28) 17 ஆம் பிரிவின் பிரகாரம் துணைக்கம்பனிகளின் மதலீடுகளை கணக்கீடு செய்வதற்காக உரிமை மூலதன முறைமையை பின்பற்றும் தேவைப்பாடு இல்லையாயின் தாய்க் கம்பனியால் (Parent Company) ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை (Consolidated Financial Statements ) | இணங்கவில்லை. தொகுதியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க துணைக்கம்பனிகளின் முதலீட்டை கணக்கீடு செய்வதற்காக உரிமை மூலதன முறைமை (Equity Method) ஈடுபடுத்தப்படுகின்றது. இலங்கை | நியமத்தின் பிரகாரம் துணைக் கம்பனிகளின் முதலீட்டை கணக்கீடு செய்வதற்காக உரிமை மூலதன முறைமை (Equity Method) ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயரிப்பதிலிருந்து விடுவிக்கும் சந்தர்ப்பத்தின் போது மாத்திரமாகும் எவ்வாறாயினும் கணக்கீட்டுக் கொள்கை 2.2.2 இற்கு இணங்க துணைக்கம்னிகளின் முதலீட்டை கணக்கீடு செய்வதற்காக உரிமை மூலதன முறைமை (Equit method) ஈடுபடுத்தப்படுகின்றது என குறிப்படப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொகுதிக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் அதிகார சபையின் துணைக் கம்பனிகளில் முதலீட்டு கிரயத்திற்கு (Cost Method) இனங்காணப்பட்டிருந்தது. இதன்காரணமாக அதிகார சபையின் சொத்துக்கள் ரூபா 765.6 மில்லியன் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமம் இலக்கம் 27 இன் (LKAS - 27 Separate Financial Statements) 10 ஆம் பிரிவிற்கு இணங்க (Pana 10) துணைக் கம்பனிகளில் முதலீட்டினை (associate) நிதிக் கூற்றுக்களில் காட்டும் போது கிரய முறைமை (Cost Methed) அல்லது கணக்கீட்டு நிழயம இலக்கம் 09 (SLFRS -09) இற்கு இணங்க உரிமை மூலதன முறைமையில் (Eguity Method) கணக்குகளை வைத்திருக்கலாம். அதற்கிணங்க துறைமுக அதிகார சபையின் தொகுதியினை கணக்கீடு செய்வதற்கு உரிமை மூலதன முறைமையும் அதிகார சபையின் கணக்குகளில் துணைக்கம்பனிகளின் முதலீட்டினைக் காட்டுவதற்கு கிரய முறைமையும் ஈடுபடுத்தப்படுகின்றது. | |
| (ஊ) | 2017 நவம்பர் மாதத்திலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட அதிகாரசபையின் இணைந்த கம்பனியான மாகம்புர துறைமுக முகாமைத்துவ் (தனியர்) கம்பனி (MPMC) யினால் 2014 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் வங்கியில் அமெரிக்க ஐக்கிய குடியரசு (அ.ஐ.கு) டொலர் 24 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதில் அமெரிக்க ஐக்கிய குடிரசு டொலர் 18,82 மில்லியன் (ரூபா 6,836 மில்லியன்) இந்த அறிக்கைத் திகதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்காததுடன் கடனை தீர்த்துவைப்பதற்காக கம்பனியிடம் போதியளவு சொத்துக்கள் இல்லை எனவும் அவதானிக்கப்பட்டது. வங்கியினால் இக்கடனை அறவீடு செய்வதற்காக இணைந்த கம்பனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரண்டு வழக்குகள் 2020 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 1(அ) பிரிவின் பிரகாரம் அதற்காக பிற்போட்ட பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்க வில்லை.இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 10(அ) பந்தியின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து நிபந்தனைகளும் பூரணப்படுத்தப்படாததனால் இதற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படாததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 41 மற்றும் 43 இன் கீழ் இது தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிசார் ஆபத்தினை தவிர்த்துக் கொள்ள முடியாததனால் இலங்கை கணக்கீட:டு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வு செய்யும் நிறுவனத்தின் பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் (LKAS 37) 85 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஏற்பாட்டிற்காக உரிய கடப்பாட்டின் தன்மை, தொடர்பாக சுருக்கமான விபரம், கொடுப்பனவு செய்வதற்கு ஏற்படுகின்ற காலப்பகுதி மற்றும் | இணங்கிக் கொள்ளவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 55 இன் மூலம் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட பெறுமதி | நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,399 மில்லியன் உரிமை கோரக் கூடிய ஒதுக்கீடுகள் சம்பந்தமாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பான பொழிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக உரிய பெறுமதியின் விபரமான விபரமான தகவல்கள் பட்டோலையின் மூலம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அளவு பெரியதானது என்பதனால் அதனை கணக்குகளினூடாக சமர்ப்பித்தலானது நடைமுறையில் மேற்கொள்ள முடியாதவையாகும். | |
| (ஏ) | அதிகார சபையினால் வருமான வரியை கணக்கீடு செய்யும் போது இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் 2022 ஏப்ரல் மாதம் வழங்கப்பட்ட 2022 இன் 14 ஆம் இலக்க வருமானவரி அதிகாரச் சட்ட கணக்கீடு செய்தல் தொடர்பான மாற்று பரிகார கூற்றிற்கு (Statement of Alternative Treatment (Soat) இணங்க அது இந்த நிதிக்கூற்றில் காட்டப்படாது அது 2021 ஆம் ஆண்டின் போது செலுத்த வேண்டிய வரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக உரிய மாற்று பரிகாரக் கூற்றில் காட்டப்படுள்ள வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி மீண்டும் வழங்கப்பட்ட Addendum SOAT இற்கு இணங்க அச்செம்மையாக்கல் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் ஆரம்ப படித்துவைத்தல் இலாபத்திற்கு செம்மையாக்கி 2022 ஆம் ஆண்டின் செலவாக உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் காட்டப்படுகின்றது என குறிப்பிடப்பட்டள்ளது. அதற்கிணங்க தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 இன் 14 ஆம் இலக்க வருமான வரி அதிகாரச் சட்டத்தை கணக்கீடு செய்தல் தொடர்பாக மாற்று பரிகார கூற்று Statement of alternative treatment (SOAT) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு கொள்கை ரீதியான கட்டமைப்பின் (Conceptual Fremework) 2.6 ஆம் பிரிவிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துபவர்களுக்கு தீர்மானம் எடுப்பதற்காக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் தொடர்புள்ளவையாக (Relevance) இருக்க வேண்டிய போதிலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் அதிகார சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| | (i) | அதிகார சபையின் வருமானங்களை அறிமுகப்படுத்தும் போது ரூபா பெறுமதிக்கு மேலதிகமாக அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் பெறுமதி குறிப்புக்களின் மூலம் காட்டப்பட்டிருக்காமையின் காரணமாக அதிகார சபையின் செயற்பாட:டு நடவடிக்கைகளின் வீழ்ச்சிக்கு ஒப்பீடாக வருமானத்தின் அதிகரிப்பு/ வீழ்ச்சியடைதலினை தெளிவாக இனங்காண முடியாதிருந்ததுடன் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் | இணங்கிக் கொள்ளவில்லை. 2022 நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்துதலின் கீழ் 2.3 ஆம் இலக்கத்தின் மூலம் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 21 இன் (09) ஆம் பந்திக்கு அஇணங்க இலங்கை துறைமுக அதிகார சபையினால் கணக்கு கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது Presentation Currency ஆக இலங்கை ரூபா பயன்படுத்தப்படுகின்றது என | அதிகார சபையின் வருமானங்களை குறிப்புக்களாக அ.ஐ.கு டொலர்களின் மூலம் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயமாற்று செம்மையாக்கலின் அடிப்படையில் இடம்பெற்றுள்ள வருமான அதிகரித்தலினை பயன்படுத்துபவர்களுக்கு மிகவும் தெளிவாக இனங்காண முடியாதிருந்தது. | வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இரண்டு வகையான பண அலகுகளில் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் தேவைப்பாடு இருக்கவில்லை. | |
| (ii) | பட்டியல்படுத்தப்படாத பங்ககுளின் முதலீட்டில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நியாயமான பெறுமதி அதிகரித்துச் செல்லல் ரூபா 29,974 மில்லியனாக இருந்ததுடன் இப்பெறுமதியினுள் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக தொகுதிக் கமம்பனியின் (HIPG) முதலீட்டுப் பங்குகளின் நியாயமான பெறுமதி 2021 இலிருந்து 2022 வரை ரூபா 143 மில்லியனால் (அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 396,908.82) குறைவடைந்திருந்தது. எனினும் வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் அதிகரித்துச் சென்றதன் பெறுபேறாக HIPG கம்பனியை உள்ளடக்கி ஏனைய முதலீட்டு கம்பனிகளின் பங்குகளின் நியாயமான பெறுமதி குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தது. அதிகார சபையினால் கம்பனிகளின் பங்கு முதலீட்டின் நியாயப் பெறுமதியை இனங்காணும் போது ரூபா பெறுமதிக்கு மேலதிகமாக அமெரிக்க ஐக்கிய குடிரசு டொலர் பெறுமதியின் குறிப்பு சமர்ப்பிக்கப்படாதிருந்ததனால் முதலீடுகளின் பெறுமதியுடன் வெளிநாட்டு நாணய செம்மையாக்கலின் அடிப்படையில் இடம்பெற்றுள்ள நியாயப் பெறுமதியின் அதிகரிப்பு நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்தும் குறிப்பு இலக்கம் 2.3 இன் மூலம் இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பந்தி இலக்கம் (09) இற்கு இணங்க இலங்கை துறைமுக அதிகார சபையினால் கணக்கு கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது Presentation Currency ஆக இலங்கை ரூபா பயன்படுத்தப்படுகின்றது எனக் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க வெளிநாட்டு நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான தாக்கம் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ நட்டமாக கணக்கீட்டு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க இரண்டு பண அலகுகளில் கணக்கை சமர்ப்பிக்கும் தேவைப்பாடு இருக்கவில்லை. | உரிய வகையில் குறிப்புக்களின் மூலம் அந்த முதலீடுகளின் அ.ஐ.கு டொலர் பெறுமதியை காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் பிரிவின் காணிப்பதிவேட்டிற்கு இணங்க ரூபா 250.8 மில்லியன் பெறுமதியான 14 காணித் துண்டுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என காட்டப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரிவினால் பேணப்பட்டு வருகின்ற முதலீட்டு ஆதனங்கள் தொடர்பான பதிவேட்டிற்கு அக்காணிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகார சபையின் நிதி நிரலைமைக் கூற்றில் முதலீட்டு ஆதனங்கள் | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. நிலையான சொத்தக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்கியதன் பின்னர் ஐயவினாவில் குறிப்பிட்டுள்ள முதலீட்டு ஆதனங்கள் குறைவாக கணிப்பீடு செய்யப்படல் அல்லது காணிகள் கூடுதல் கணிப்பீடு செய்யப்படல் தொடர்பான சிக்கல் உருவாக மாட்டாது. | அதிகார சபையின் ஏனைய உள்ளகப் பிரிவுகளுக்கும் நிதிப்பிரிவிற்குமிடையே சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணுவதன் மூலம் நாளதுவரையான தகவல்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதியால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் காணியின் பெறுமதி அதிக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக தொகுதிக் கம்பனியின் (HIPG) (பட்டியல்படுத்தப்படாது) பங்குகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 59,577 மில்லியனான நியாயப் பெறுமதி 2021 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக HIPG இன் முதலீட்டுப் பெறுமதி ரூபா 212 மில்லியனால் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளவில்லை. HIPG கம்பனியின் கணக்காய்வு செய்த கணக்குகள் 2023 மே 11 ஆந் திகதியே இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிடைத்துள்ளது. அதற்கிணங்க கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய செம்மையாக்கல்கள் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பங்குகளின் நியாயமான பெறுமதியானது கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் தீர்மானித்தல் மிகவும் சரியானது என்பதனால் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு கொள்வனவு முற்பணங்கள் கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 1,531 மில்லியன் மீதியினுள் பொருட்கள் கிடைத்து கொடுப்பனவுகள் முடிவுறுத்தப்பட்ட எனினும் செலவாக வருமானக் கூற்றிற்கு இனங்காண்பதற்கு அல்லது இனங்காணப்பட்ட கொள்கையின் அடிப்படையில் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா 1,071 மில்லியன் தொகையான உதிரிப்பாகங்கள் மற்றும் சொத்துக் கொள்வனவுகள் காணப்பட்டன. இதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம்/ நடைமுறையற்ற சொத்துக்கள் அப்பெறுமதியால் கூடுதல் கணிப்பீடு / குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டு கொள்வனவு முற்பணங்கள் கணக்கில் காணப்பட்ட 1,071 மில்லியன் மீதியில் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 59 மில்லியன் தீர்த்துவைக்கப்பட்டள்ளதுடன் மிகுதி மீதியினை திர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெளிநாட்டு கொள்வனவு முற்பணங்கள் கணக்கின் மிகுதியான மீதியினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பெறவேண்டிய காணி வாடகை வருமானம் | | |
| | (i) விடுவிக்கப்படாத இறக்குமதி செய்யப்பட்ட 244 கொள்கலன்கள் 22 நாட்களிலிருந்து 3583 நாட்கள் வவரையான காலி துறைமுக நிலையத்தில் காணப்படுவதுடன் அந்த கொள்கலன்களுக்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு வேண்டிக் காணப்பட்ட ரூபா 3,952 மில்லியன் நில வாடகை நிதிக்கூற்றுக்களில் வருமானமாக இனங்காணப்படவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. ஒரு பகுதி தற்பொழுது பொருளைப் பெறுபவர்களால் விடுவிக்கப்பட்டு அதற்குரிய கட்டணம் அதிகார சபையினால் அறவிடப்பட்டுள்ளன. மிகுதி கொள்கலன்கள் பெருளைப் பெறுபவர்களால் விடுவிக்கப்படாதவை மற்றும் சுங்கத்தின் மூலம் பரீட்சிப்பிற்கபாக தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களாகும். இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை விடுவிப்பதற்கு அல்லது கேள்விகளுக்காக | உரிய நிலவாடகையினை வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பட்டியல்படுத்துவதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் அங்கீகாரம் வழங்கப்படாததனால் அதன் நில வாடகையை வருமானமாகக் காட்டுதல் நடைமுறையில் சாத்தியமற்றதாகும். | |
| (ii) | விடுவிக்கப்படாத இறக்குமதி செய்யப்பட்ட 50 வாகனங்னகள் 810 நாட்களிலிருந்து 5203 நாட்கள் வரையான காலம் துறைமுக நிலையத்தில் காணப்படுவதுடன் அந்த கொள்கலன்களுக்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டி இருந்த ரூபா 1,949 மில்லியன் நில வாகை நிதிக்கூற்றுக்களில் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிட்ட 50 வாகனங்களில் 42 வாகனங்கள் சங்கத்தின் மூலம் பரீட்சிப்பிற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் சுங்கத்தினால் சுங்கத்தின் பொறுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் துறைமுகத்திற்கு நில வாடகை செலுத்தப்படாததனால் அந்த வாகனங்களை சுங்கத்தினால் விடுவிக்கும் வரை ஒரு வருமானமாகக் காட்டுதல் நடைமுறைக்குப் பொருத்தமற்றதாகும். மிகுதியான 08 வாகனங்கள் இறக்குமதி மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரம் கிடைக்கும் வரை துறைமுகத்திலிருந்து விடுவிக்க முடியாதவையாகும். | உரிய நில வாடகையை வருமானமாக இனங்காணப்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பிற்போட்ட வரிப் பொறுப்பின் கணிப்பின் போது அதிகார சபை வரிச்சலுகை பெற்றுக்கொண்ட இன்னும் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் பெறுமதியான ரூபா 9,787 மில்லியன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாமை மற்றும் ரூபா 1516 மில்லியனான கட்புலனாகாத சொத்துக்களை விடுவித்தல் கணிக்கின் பெறுமதி இரண்டு தடவைகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக அதிகார சபையின் பிற்போட்ட வரிப் பொறுப்பு ரூபா 996 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்ததுடன் அத்தொகையால் இலாபம் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளவில்லை. வரிச் சலுகைபெற்றுக்கொள்ளப்பட்டு இன்னும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் பெறுமதியான ரூபா 9,787 மில்லியன் கணக்கீட்டு புத்தகப் பெறுமதிக்கு செமத்மையாக்கப்பட வேண்டிய போதிலும் பிழையாக அப்பெறுமதி ரூபா 11,963 மில்லியனாக கணக்கீட்டு புத்தகப் பெறுமதிக்கு செம்மையாக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் பிற்போட்ட வரிப் பெறுமதி ரூபா 996 மில்லியனால் மாத்திரம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய பிற்போட்ட வரிக் கணிப்பீட்டினை சரிசெய்து உரிய செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | அதிகார சபையின் வருமானவரி கணிப்பீட்டின் போதுர் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க வரிக்கு முன்னைய இலாபமான ரூபா 57,025.7 மில்லியனுக்குப் பதிலாக ரூபா 58,025.7 மில்லியன் பிழையாக வரிக்கு முன்னைய இலாபமாக ஈடுபடுத்தப்பட்டதனால் வரிப்பொறுப்பு ரூபா 123 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளவில்லை. வருமானவரியை கணிப்பீடு செய்யும் போது எங்களால் வரிக்கு முன்னைய இலாபமாக ரூபா 58,025,790,184 தொகையினை எடுத்தல் பிழையானது என்பதற்கு இணங்க வரிக்கு முன்னைய இலாபமாக சரியாக ரூபா 57,025,790,184 இனை செம்மையாக்கியதன் பின்னர் வரிப் | வருமானவரியை கணித்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டு உரிய செம்மையாக்கல் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொறுப்பு ரூபா 123,137,909 தொகையினால் குறைவடையும் | |
| (எ) | அதிகார சபையின் வெளிநாட்டு நாணயத்தினால் கிடைக்கின்ற வருமானத்தை உள்நாட்டு பணத்திற்கு பரிமாற்றம் செய்யும் போது கொள்வனவு செய்யும் விலை விகிதத்திற்குப் (Buying Rate) பதிலாக அதிக பெறுமதியுடனான விற்பனை விலை (Selling Rate) ஈடுபடுத்திய பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை கம்பனியின் (C,I,C,T) கொள்கலன் செயற்பாட்டின் அடிப்படையில் அதாவது இணங்கிக் கொண்ட ஆகக்குறைந்த கொள்கலன்களின் எண்ணிக்கை (Twenty Equivalent Units) மற்றும் அதற்கு மேலதிகமாக செயற்படுத்தப்படுகின்ற கொள்கலன்களின் அடிப்படையில் கிடைக்கின்ற ‘‘அரசிறை’’ (Royalty) வருமானத்தை உள்நாட்டுப் பணத்திற்கு பரிமாற்றம் செய்யும் போது விற்பனை விலை பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ஏனைய பெறவேண்டியவைகளின் பெறுமதி ரூபா 69.5 மில்லியனால் அதிக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளவில்லை. ‘‘அரசிறையை’’ அறவீடு செய்வதற்காக விலைப்பட்டியலிடும் போது உடன்படிக்கையின் பிரகாரம் அது அமெரிக்க டொலர் பண அலகில் மேற்கொள்ளப்படுகின்றது. அதனை கணக்குகளில் எடுத்துக்கொள்வதற்காக விற்பனை விகித்தினை ஈடுபடுத்துதல் ஆரம்பத்திலிருந்தே இடம்பெறுவதுடன் மீண்டும் பணத்தை பெறும் போது ஏற்படுகின்ற வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ நட்டம் கணக்குகளில் செம்மையாக்கல் செய்யப்படும். அதனால் வருமானம் கூடுதல் மதிப்பீடு செய்தல் இடம்பெறவில்லை. க | உரிய அரசறை வருமானத்தை உள்நாட்டு பணத்திற்கு பரிமாற்றம் செய்யும் போது வெளிநாட்ட நாணயத்தை கொள்வனவு விலைக்கு பயன்படுத்துதல் வேண்டும். |
| (ii) | அதிகார சபைக்கு தெற்காசியா நுழைவாயில் இறங்குதுறை கம்பனியால் (S.A.G.T) செலுத்தப்படுகின்ற அரசிறை (Royalty) வருமானம் மற்றும் குத்தகை வாடகை (Lease Rent) வருமானத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பெறுமதியை உள்நாட்டு நாணயத்திற்கு பரிமாற்றம் செய்யும் போது விற்பனை விலை விகித்தினை பயன்படுத்தியதன் காரணமாக மேற்கூறிய பெறவேண்டிய மீதி முறையே ரூபா 5.2 மில்லியன் மற்றும் ரூபா 2.9 மில்லியனால் கூடுதல் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | ‘‘அரசிறை’’ அறவீடு செய்வதற்காக விலைப்பட்டியலிடும் போது உடன்படிக்கையின் பிரகாரம் அது அமெரிக்க டொலர் பண அலகில் மேற்கொள்ளப்படுகின்றது. அதனை கணக்கில் எடுத்துக் கொள்வதற்காக விற்பனை விகித்தினை ஈடுபடுத்துதுல் ஆரம்பத்திலிருந்தே இடம்பெறுவதுடன் மீண்டும் பணத்தை பெற்றுக்கொள்ளும் போது இடம்பெறுகின்ற வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ நட்டம் கணக்குகளில் செம்மையாக்குதல் இடம்பெறும். அதனால் வருமானம் கூடுதல் மதிப்பீடு செய்யப்படுவதில்லை. | உரிய அரசிறை வருமானத்தை உள்நாட்டு நாணயத்திற்கு பரிமாற்றம் செய்யும் போது வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு விலைக்கு பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | காலி துறைமுகத்தில் பல்நோக்கு இறங்குதுறையை நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (JBIC) இடையே கடன் உடன்படிக்கை | இணங்கவில்லை. செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் இச்செயற்திட்டத்தின் வடிவமைத்தல் திட்டம் பயன்படுத்தலாம் என்பதனால் இச்செலவு சிக்கனமற்ற ஒரு | செலவின் தன்மை எதிர்கால எதிர்பார்ப்புக்கள் முதலியவற்றினை கவனத்தில் எடுத்து இலங்கை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காலி கோட்டைக்கு அருகாமையில் இந் நிர்மாணத்தை மேற்கொள்வதற்காக யுனெஸ்கோவின் (UNESCO) அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதற்காக 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தமை கடன் நிதி நீடிக்கப்படாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இச்செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இதற்காக செலவுசெய்யப்பட்ட ரூபா 422.5 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணம் அதிகார சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அச்செலவு மூலனத அல்லது வருமான செலவாக இனங்காணப்படவில்லை. மேலும் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தாமையின் காரணமாக மேலே செலவு செய்யப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவாக மாறியிருந்தது. | செலவு அல்ல மேலும் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காலி துறைமுகத்திற்கான செயற்திட்ட விருப்பினைக் கோருதல் இத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. எனவே காலி துறைமுக செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட திட்டம் அச்செயற்திட்டத்தின் விருப்பினை கோரும் காலி துறைமுகத்தின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு கடைப்பிடிப்பதனால் அறிக்கையில் குறிப்பிட்டவாறு இது சிக்கனமற்ற ஒரு செலவு அல்ல. இது தொடர்பாக கணக்கு இலக்கம் 51 இன் மூலம் வெளிப்பட்டுத்தப்பட்டுள்ளது. | நியமங்களின் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமாக செலவுகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | ஹம்பாந்தோட்டை துறைமுக செயற்திட்டத்திற்டகான வெளிக்கள கடமைக்காக மற்றும் காணியை திறந்த வெளியாக்குவது தொடர்பாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4.39 மில்லியன் பணமும் காணியை இழந்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 108.77 மிலிலியன் பணம் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கும் செலவு செய்யப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் உரிய இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பான அறிக்கை அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் செலவு செய்யப்பட்ட ரூபா 113.16 மில்லியன் பணம் முதலீட்டுட ஆதனமாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. காணியின் உரிமை இன்னும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஒப்படைக்கப்படவில்லை. சுவீகரிக்கப்பட்ட காணியை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்காக முன்னாள் சனாதிபதி அவர்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. உறுதியினைத் தயாரித்து கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அவை சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பல குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக சில ஆவணங்கள் காணி ஆணையாயர் நாயகத்திற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களை சரிசெய்து உறுதியினை தயாரிப்பதற்காக காணி ஆணையாளர் நாயக அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இக்காணியின் உரிமையை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஒப்படைத்ததன் பின்னர் இச்சொத்துக்களை அதிகார சபையிர் ஏடுகளில் உள்ளடக்கலாம். | சட்டரீதியாக காணியை பொறுப்பேற்பதோடு பொறுப்பேற்கப்பட்ட பகாணிகளின் பெறுமதியை காணி விடுவிப்பு கணக்கிலிருந்து முதலீட்டு ஆதன கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2001 ஆம் ஆண்டின் போது தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை (S.A.G.T) கம்பனி ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அதிகார சபையினால் வழங்கிய மூன்று | “தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கடப்பாட்டினை ஏற்படுத்திக் | உரிய கம்பனியுடன் கலந்துரையாடி உடன்படிக்கைக்கு இணங்க கிரேன்களின் பெறுமதிக்காக அதிகார |

| | | | |
|---|---|---|---|
| | கிரேன்களின் பெறுமதியை பரிமாற்றம் செய்வதற்காக ரூபா 141.63 மில்லியன் பெறுமதியான அந்த கம்பனியின் பங்குகள் அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது என நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 12.2 இல் காட்டப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த இப்பணம் அல்லது பங்குகளின் உரிமை மீளாய்வாண்டின் இறுதிவரை அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் உரிய கம்பனிழயால் பங்குகளுக்காக செலுத்த வேண்டிய பணம் இல்லை என மீதிகளின் உறுதிப்படுத்தலின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக தெற்காசிய நுழைவாயில் இறக்குதுறை கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கடப்பாட்டினை உருவாக்கிக் கொண்டிருக்காமையின் காரணமாக அதிகார சபைக்கு உரிய கம்பனியின் பங்குகள் கிடைத்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டதுடன் அதிகாரசபைக்காக ஐயக் கடனுக்கான ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | கொள்ளாமை'' என்ற கூற்று சம்பவம் தொடர்பாக முறையான ஆய்வின்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. துறைமுக அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பங்ககுளின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக அடிக்கடி கடிதங்களின் மூலம் S.A.G.T கம்பனியுடன் வேண்டுகோள் விடுகிகப்பட்டது. . | சபைக்கு கிடைக் வேண்டிய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2007/08 ஆம் ஆண்டிலிருந்து 2010/11 ஆம் ஆண்டு வரையான நிதி ஆண்டிற்காக அதிகார சபையின் வருமான வரியினைக் கணிப்பீடு செய்தல் சம்பந்தமான மேன்முறையீடு வரி மேன்முறையீட:ட நீதிமன்றத்திற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்காதாதனால் உரிய ஆண்டிற்காக வரி செலுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் இதற்காக ரூபா 6,387.35 மில்லியன் தொகைக்கான ஒதுக்கீடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,141.75 மில்லியன் குறைத்து ரூபா 5,245.6 மில்லியன் ஒதுக்கீடு மாத்திரம் பே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளவில்லை. 2009/2010 வரி ஆண்டு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சார்பாக தீர்பு வழங்கப்பட்டிருந்ததனால் 2020 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் காணப்பட்ட ஏனைய வழக்குகளுக்காக ரூபா 5,245.6 மில்லியன் நிதி ஏற்பாடு கணக்குகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கொள்ளப்படுதல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் உரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளுதல் வேண்டும் |
| (ஔ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்த நிறுத்திவைத்தல் வரி மீதி ரூபா 581.31 மில்லியன் மற்றும் கிடைக் வேண்டிய வருமானவரி மீதியாக ரூபா 2,102 மில்லியன் மீதியானது செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புக்கு எதிரீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகார சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்கிக் அகொள்ளவில்லை. அப்பணத்தை செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிரீடு வெய்யும் வரை கிடைக்க வேண்டிய வருமான வரியாக கணக்கீடு செய்து காட்டப்பட்டுகின்றது. | உரிய கிடைக்க வேண்டிய நிறுத்திவைத்தல் வரி முதலியவற்றை துரிதமாக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க பெறுமதி ரூபா மில்லியன் | துணை அறிக்கைகளுக்கு இணங்க பெறுமதி ரூபா மில்லியன் | வித்தியாசம் ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | சூரிய வெவ விளையாட்டு மைதானத்தினை நிர்மாணிப்பதற்காக அரசாங்க வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் | 3,292.38 | 3,355.17 | 62.79 | இந்த மீதமிகளுக்கிடையிலான வித்தியாசத்திற்கான காரணம் சம்பந்தமாக மக்கள் வங்கியுடன் கலந்துரையாடி உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அந்த வித்தியாசங்கள் சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 08 சொத்துக்கள் தொகுதிக்குரிய நிலையான சொத்தக்களுக்கான அதிகரிப்புக்கள் (Additions) | 316 | 866.2 | 550.2 | இணங்கிக் கொள்ளவில்லை. 2023 மார்ச் 16 ஆந் திகதிய FD/FA/C/82/2023/12 ஆம் இலக்க கடித்தின் மூலம் சமரப்பிக்கப்பட்டுள்ள சொத:துக்களுக்கான அதிகரிப்புக்களுக்கும் (Additions) நிதிக்கூற்றுக்களின் சொத்துக்களுக்கான அதிகரிப்பிற்கும் (Additions) இடையே வித்தியாசம் இல்லை. | உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அந்த வித்தியாசத்தை சரிசெய்தல் வேண்டும். |
| (இ) | கணக்கு இலக்கம் 27 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய நில வாடகை | 13.75 | 40.37 | 26.62 | கணக்கு இலக்கம் 27 ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 40,372,508 சரியானதாகும். என | உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து வித்தியாசத்தினை சரி செய்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொளளப்பட்ட கடன் பணத்திற்கான தவணைப் பணமாக | 4,778 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | இணங்கிக் கொள்ளவில்லை. உரிய பணத்தை மீண்டும் துறைமுக அதிகார | பொதுத்திறைசேரியுடன் கலந்துரையாடி கிடைக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிகார சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 4,406 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 372 மில்லியனையும் உள்ளடக்கி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,778 மில்லியன் பணம். | | | சபைக்கு வழங்குமாறு பொதுத்திறைசேரியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 2019-02-12 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் இது தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டது. இதற்கான ஒரு கலந்துரையாடலினை வழங்குமாறு வேண்டி துறைமுக கப்பல் துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் பொதுத்திறைசேரியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கும் மேற்கூறிய பணத்தை வழங்குமாறு வேண்டி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. | வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் எண்ணைத் தாங்கிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பொதுத் திறைசேரியால் ஒரு அரசாங்க வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட டொலர் கடன் பணத்தை பொதுத்திறைசேரியினால் நிர்ணயிக்கப்பட்ட வேளைக்கு செலுத்தாமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது அந்த அரசாங்க வங்கியின் அதிகார சபையின் பெயரில் பேணப்பட்டு வந்த அ.ஐ.கு டொலர் 635,069 அதாவது ரூபா 377.8 மில்லியனாகும். | 377.8 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | இணங்கிக் கொள்ளவில்லை. இதனை சரிசெய்து உரிய அறவிடப்பட்ட பணத்தை மீண்டும் வழங்குமாறு வேண்டுகோள்விடுத்து முன்னைய ஆண்டுகளைப் போல 2021 ஆம் ஆண்டின் போதும் 2021-03-31 ,2021-06-15, 2021,12,02 மற்றும் 2022-06-20, 2023-03-24 ஆந் திகதிகளில் இலங்கை வங்கியின் பிரதான கிளைக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. இப்பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையினால் முடியுமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது. | பொதுத்திறைசேரியுடன் கலந்துரையாடி பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை நலக்கறி கம்பனியின் (Lanka Coal Company) பங்குகளில் முதலீடு | 10.7 | உரிய கம்பனியின் 2022 ஆம் ஆண்டிற்கா | இணங்கிக் கொள்ளவில்லை. எங்களால் பல தடவை 2022 திசெம்பர் இற்கான | இலங்கை நிலக்கரி கம்பனியின் புதிய |

| | | | |
|---|---|---|---|
| | ன நிதிக்கூற்றுக்கள் | நிதிக்கூற்றுக்களை எங்களுக்கு வழங்குமாறு இலங்கை நிலக்கரி கம்பனியிடமிருந்து (Lanka Coal Company) வேண்டப்பட்டிருந்தும் இன்றுவரை நிதிக்கூகூற்றுக்கள் கிடைத்திருக்கவில்லை. அதற்கிணங்க 2021 இலிருந்து 2022 வரை இலங்கை நிலக்கரி கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி மாற்றமின்றி காணப்படுகின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டது. | நிதிக்கூற்றுக்களைப் பெற்று அதன் பெறுமதியை கவனித்துப் பார்த்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் கடன் காலப்பகுதியை மிகைத்த மொத்த கப்பல் முகவர் கடன்ப்டடோர் மீதி ரூபா 4,795 மில்லியகனாக இருந்ததுடன் அது மொத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதியில் 64 சதவீதமாகும். அதனுள் ரூபா 2,798 மில்லியன் காணப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் கடன் காலப்பகுதியை மிகைத்த மீதி கணக்காய்வுத் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்கால எல்லையை மிகைத்த கடன்பட்டோர் மீதியுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. மேற்கூறிய கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 6,035,370.99 பணத்தை பதிவழிப்பதற்கான சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்காக 2023-05-11 ஆந் திகதி கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | அங்கீகரித்த கடன் கால எல்லைக்குள் உரிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு முகாமைத:துவத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிணக்குகளுடனான கடன்பட்டோர் மீதி (Dispute debtors) ரூபா 229 மில்லியன் மற்றும் மீண்டும் தீர்த்துவைப்பதற்காக (re-dispute) அனுப்பிவைக்கப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 10.8 மில்லியன் தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது. | பிணக்குகளைக் கொண்ட கடன்பட்டோர் மீதியுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2023-05-15 ஆந் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் dispute கணக்கின் மீதி ரூபா 113,772,450 வரையும் Re-dispute மீதி ரூபா 5,613,084 வரையும் குறைவடைந்திருந்தது. ரூபா 107,909,678 தொகையான ஒரு தனியார் நிறுவனத்தின் dispute விலைப்பட்டியல், சேவைக்கட்டண திருத்தமானது இறங்குதுறை சேவை உடன்படிக்கைக்கு முரணானது என தெரிவித்து அனுப்பிவைத்த விலைப்பட்டியல்கள் ஆனதுடன் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டது. அதன்போது எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு இணங்க | காணப்படுகின்ற பிணக்குகளை தீர்த்துவைத்து பெறவேண்டியவைகளை முடியுமான அளவு விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2022 திசெம்ர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி சம்பந்தமாக வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள (Under Litigation) கப்பல் முகவர் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 491.6 மில்லியனாக இருந்ததுடன் அதில் கொழும்பு துறைமுகத்திற்குரிய ரூபா 428.8 மில்லியன் மீதிக்காக 12 கடன்பட்டோர்கள் (Marshal of Admiralty High Court) உள்ளடங்கலாக நிதிப்பிரிவின் மூலம் காட்டப்பட்டிருந்தும் அப்பெறுமதியினுள் ரூபா 20.2 மில்லியனான 4 கடன்பட்டோர்கள் சம்பந்தமாக வழக்கு தொடுக்கப்பட்டள்ளது என சட்டப் பிரிவின் மூலம் கணக்காய்விற்கு தெரியப்படுத்தவில்லை. | கடன்பட்டோர் பெறுமதியுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. கணக்கு இலக்கம் 278 மற்றும் 303, கப்பல் முகவர்களின் மீதியை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக AR (Accont Receivable Committee) குழுவின் போது தீர்மானிக்கப்பட்டு அதற்கிணங்க ரூபா 6,035,370.99 பணத்தை பதிவழிப்பதற்கான சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்காக 2023-05-11 ஆந் தகிதி கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. தனியார் நிறுவனத்தின் Diamand Discovery கப்பலுக்காக அறவிட வேண்டிய கட்டணத்திற்காக சான்றுபடுத்தப்பட்ட பிரதி சட்ட பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இன்னுமொரு நிறுவனம் சம்பந்தமாகவும் சட்ட ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக பணத்தை செலுத்தாதுள்ள கடன் பட்டோர்கள் சம்பந்தமாக வழக்கினை தாக்கல் செய்வதற்கு உள்ள இயலுமையினை சட்ட பிரிவினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபையினால் நீண்டகாலமாக பணத்தை அறவிடப்படாத ரூபா 40.3 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட சுற்றாடல் வாடகை கடன்பட்டோர் மற்றும் ரூபா 3.5 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட இரண்டு கப்பல் முகவர் கடன்பட்டோர்கள் சம்பந்தமாக ஒப்படைக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளின் கட்டளை அதிகார சபைக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என சட்டப் பிரிவினால் கணக்காய்விற்கு தெரியப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் கட்டளை திகதியிலிருந்து நீண்டகாலம் கடந்திருந்தும் அத்தீர்ப்பினை அமுல்ப்படுத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,727,587 பணத்தை அறவீடு செய்வதற்காக பணத்தை அறவீடு செய்வதற்காக அந்த நிறுவனத்தின் சொத்துக்களின் விபரத்தினை வழங்குமாறு அதிகார சபையினால் எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் அந்த நிறுவனத்தின் சொத்துக்களை ஆராய்ந்து பார்ப்பதற்காக அந்த சேவையினை வழங்குவதற்குரிய ஏனைய ஒரு நிறுவயத்தின் உதவினையப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. Ocean Lanka Services (Pvt) Ltd வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 2019-05-13 ஆந் திகதி அதிகார சபைக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கிணங்க சட்ட ஆணையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. Consolidated marine Engineering Ltd. வழக்கின் ஒரு தலைப்பட்டசமான திர்ப்பு 2015-11-12 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் | கடன்பட்டோர் தகவல்கள் உள்ளடக்கப்படாமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன் கடன்பட்டோர் மீதிகளுக்கிடையே காணப்படுகின்ற வித்தியாசங்களுக்கான காரணங்களைக் காட்டி கடன்பட்டோர் இணக்க கூற்று தயாரிக்கப்பதல் வேண்டும். ா |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகார சபையினால் தீர்ப்புக்கூற்று 2016-01-21 ஆந் தகிதி கோவை செய்யப்பட்டது. கோவை செய்யப்பட்டுள்ள தீர்ப்புக்கூற்றுக்களுக்கு இணங்க அறவிட வேண்டிய கட்டணத்தை அறவீடு செய்தல் இடம்பெற்றதுடன் அதன் சரியான தன்மை நீதிமன்றத்தால் வழங்கியதன் பின்னர் அந்த நிறுவனத்திடமுள்ள சொத்துக்களை ஆராய்ந்து பார்த்து நீதிமன்றத்திற்கு அறிவித்ததன் பின்னர் தீர்ப்புக் கூற்று அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | |
| (உ) | அதிகார சபையினால் MV Jammi கப்பலுக்கு வழங்கிய சேவைகளுக்காக அறவிட வேண்டிய பணத்திற்காக கொழும்ப உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு கோவை செய்யப்பட்டிருந்ததுடன் 2019 மார்ச் 13 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப்புக்கு இணங்க ரூபா 197.1 மில்லியன் (அ.ஐ.கு டொலர் 1,945,712) பணம் உரிய கப்பலிலிருந்து அதிகார சபைக்கு கிடைக்க வேண்டி இருந்தது. உரிய கப்பல் ஏல விற்பனையில் பெற்ற பணம் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது எனவும் அந்த பணத்திற்காக உரிமைச் சான்றிதழ் பல்வேறு தரப்பினர்களுக்கு உரிய பணம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள பணமான அ.ஐ.கு டொலர் 692,080 பணத்தை சமமாக பகிர்ந்து பெற்றுக்கொள்வதற்கு முறைப்பாட்டுக்காக அரசாங்க கம்பனியுடன் அதிகார சபையும் 2017 பெப்ரவரி 23 ஆந் திகதி பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தீருந்தும் இன்னும் முழுப்பணமும் கிடைக்க வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | MV Jammi கப்பலுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிட வேண்டிய பணம் ரூபா 197,093,842 உடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | உரிய நிறுவனத்துடன் மேலும் கலந்துரையாடி அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை முடியுமான அளவு விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 நவம்பர் 21 ஆந் திகதிய மூகொ/மூகி/கொ/41/2022 ஆம் இலக்க அதிகார சபையின் உள்ளக சுற்றிக்கையின் 6.5 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கியுள்ள வளவிற்காக கிடைக்க வேண்டிய குத்தகை பணம் மற்றும் மின்சாரத்தை மீளளிப்புச் செய்தல் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தாமதமின்றி சேகரிப்பதற்கான ஒரு நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத்த வளவு வாடகை கடன்பட்டோர் ரூபா 172.9 | கடன்பட்டோர் மீதியுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. கொழும்பு துறைமுகத்திற்குரிய வளவின் வாடகை கடன்பட்டோர் மீதி 2023-05-24 ஆந் திகதளயளவில் ரூபா 1,062,272.59 மீதி தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. Team Work நிறுவனம் தொடர்பான ரூபா 5,614,262 தொகையான அறவிட வேண்டிய பணம் 2023-01-30 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு இணங்க 2023 பெப்ரவரி மாதம் | உரிய நிறுவனங்களுடன் மேலும் கலந்துரையாடி அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மிகவும் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக இருந்ததுடன் அது முழு வளவு வாடகை கடன்பட்டோரில் 76 சதவீதமாகும். 2023 மே 24 ஆந் திகதி வரையும் அதில் 1.1 மில்லியன் மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 5.6 மில்லியன் பணத்தை பதிவழிப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | பதிவழிக்கப்பட்டதுடன் 06 மாதங்களை மிகைத்த ரூபா 77,032,359 மீதியினை பதிவழிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள வளவிற்காக கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறையினை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கை ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. | |
| (எ) | Barge formentera கப்பல் தொடர்பாக காணப்பட்ட வழக்கு நடவடிக்கைகளின் தீர்ப்புக் கூற்றின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் உரிய கப்பலுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக ரூபா 81.6 மில்லியன் பணம் கிடைக் வேண்டியவை என்பதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையினால் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அப்பெறுமதியை மீண்டும் கணிப்பீடு செய்ததன் பின்னர் 2023 மார்ச் 09 ஆந் திகதி நீதி மன்றத்தினால் ரூபா 69.1 மில்லியன் பணம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு விடுவிப்பதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது எனவும் பிரதான சட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் உரிய கப்பல் முகவர் கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 34.3 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதில் நீதிமன்ற கணக்குகளிலிருந்து பணத்தினை வழங்கும் போது உரிய பணம் நீதிமன்றத்தின் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்ட காசோலை வழங்கப்படுவதனால் ஊகித்துக் கொள்ளப்படுகின்றவாறு பண மோசடி இடம்பெறுவதற்கான இயலுமை இல்லை. | உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த:து உரிய செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | ஒரு பிரதான கப்பல் முகவர் நிறுவனமான 393 ஆம் கணக்கு இலக்க முகவர் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிணக்குகளுடனான கடன்பட்டோர் (Dispute Debtors) மீதியானது 1292 விலைப்பட்டியல்களை உள்ளடக்கிய ரூபா 128.3 மில்லியனாக இருந்ததுடன் ‘‘இலங்கை துறைமுக அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட கட்டண திருத்தம் உரிய கப்பல் முகவர்களின் இறங்குதுறை சேவை உடன்படிக்கைக்கு முரணானதாகவிருத்தல்’’ இன் காரணமாக உரிய கப்பல் முகவர் நிறுவனத்தினால் அந்த விலைப்பட்டியல்களின் பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பிரதான கொடுக்கல் வாங்கல் நிறுவனத்திடம் | கணக்கு இலக்கம் 393 Evergreen Shipping Agency Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் ரூபா 128,304,375 மீதியானது தீர்த்து வைக்கப்படாத விலைப்பட்டியல்களை தீர்த்துவைக்கும் குழுவிற்கு இயலுமை இல்லாததனால் துறைமுக அதிகார சபையினால் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது அதற்கிணங்க உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி துறைமுக அதிகார சபையினால் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும். | உரிய சச்சரவான விலைப்பட்டியல்கள் துரிதமாக தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் கட்டணங்களை திருத்தம் செய்யும் போது துறைமுகங்கள் அதிகார சட்டத்திற்கு இணங்க நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட சச்சரவான விலைப்பட்டியல்களை மிகவும் விரைவாக தீர்த்துவைப்பதற்கும் அதிகார சபையின் கட்டணங்களை திருத்தம் செய்யும் போதும் 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகார சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | 2022 நவம்பர் 21 ஆந் திகதிய முகொ/முகி/கொ/41/2022 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 2.4, 2.5, 2.7 மற்றும் 2.10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மூன்றாம் தரப்பினர்களுக்கு மீதிகளின் உறுதிப்படுத்தல்களை அனுப்பும் போது உரிய விலாசம் சரியானது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் அத்தியவசியமானதாக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அனுப்பிய ரூபா 651.3 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 25 கடன் கொடுத்தோர்கள் மற்றும் ரூபா 3,839.4 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 9 கடன்பட்டோர்களின் மீதிகளின் உறுதிப்படுத்தல் சரியான விலாசம் இல்லாததன் காரமாக சரியான விலாசம் இல்லாததன் காரணமாக திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. | சில நிறுவனங்களின் கடன்கொடுத்தோர் கோவைகளுக்கு இணங்க முன்னைய விலாசம் சரியானது என்பதனால் அந்த விலாசத்திற்கு கடிதங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகார சபைக்கு வழங்கியுள்ள விலாசம் மாற்றமடைந்து இருக்குமாயின் விலாசத்தினை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான விலாசம் இல்லாததன் காரணமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ள மீதிகளின் உறுதிப்படுத்தல்களின் விலாசம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அவற்றினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் உறுதிப்படுத்தல்களுக்காக அனுப்பிய ரூபா 66.3 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 17 கடன்கொடுத்தோர்கள் ரூபா 14.7 மில்லியன் வித்தியாசத்துடன் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 424.8 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 13 கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 416.9 மில்லியன் வித்தியாசத்துடன் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | அதிகார சபையின் மீதிகளுடன் இணங்கிக்கொள்ளாது மீதிகளுக்காக விபரமான விளக்கமளித்தல்கள் மற்றும் வித்தியாசங்கள் காணப்படுமாகவிருந்தால் அது தொடர்பாக உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் உரிய செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சம்பந்தமாக கடன்பட்டோர் மீதிகளின் இணக்க கூற்றுக்களைத் தயாரித்து வித்தியாசத்திற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த:து தேவையான நட்வடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | கப்பல் முகவர் பாதுகாப்பு வைப்புக்கள் தொடர்பாக ரூபா 80.5 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 03 கப்பல் முகவர்கள் ரூபா 19.6 மில்லியன் வித்தியாசத்துடன் மீதிகளின் உறுதிப்படுத்தல்களைசட சமர்ப்பித்திருந்தனர். | மீதிகளின் வித்தியாசங்கள் சம்பந்தமாக உரிய கப்பல் நிறுவனங்களை விசாரித்திருந்த போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி பதிலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சம்பந்தமாக வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அப்பணத்தை உரிய |

| | | |
|---|---|---|
| | | கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனை சேவை கம்பனி (SLPMCS) இனால் காலி முகத்திடலில் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதிகாரசபைக்கு தரகாக கிடைக்க வேண்டிய ரூபா 940,230 பணம் மற்றும் காலி முகத்திடலினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டின் போது செலவு செய்யப்பட்ட ரூபா 7.61 மில்லியன் பணத்தை அக்கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. காலிமுகத்திடலினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டின் போது செலவு செய்யப்பட்ட ரூபா 7,609,035.79 பணம் துணைக்கம்பனியான இலங்கை துறைமுக முகாதைத்துவ மற்றும் ஆலோசனைக் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அதனை ஏடுகளில் பதிவழக்க வேண்டும் என்பதற்கான அங்கீகாரம் இன்றுவரை கிடைத்திருக்கவில்லை. | இப்பணத்தை உரிய கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 முற்பணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) கொழும்பு துறைமுகத்திற்குரிய கப்பல் முகவர்களினால் முன்னரே செலுத்திய முற்பணங்களைத் தீர்த்:து வைத்ததன் பின்னர் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாகக் காணப்பட்ட மீதி ரூபா 997.83 மில்லியனில் ரூபா 197.31 மில்லியன் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கப்பல் முகவர் செலவு மீதியாகக் காட்டப்பட்டிருந்த இன்வொயிஸ் பெறுமதியினைவிட அதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,755 மில்லியனில் ரூபா 130 மில்லியன் 06 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகள் காலப்பகுதி கடந்திருந்தும் கணக்காய்வுத் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. கொழும்பு துறைமுகத்தில் கப்பல் முகவர் முற்பணக் கணக்கின் மீதிகளில் 2023-05-15 ஆந் திகதியில் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத்த மீதி ரூபா 197,312,750.28 வரை தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் கப்பல் முகவர் செலவு மீதிகளில் 06 மாதங்களை மிகைத்த செலவு மீதி ரூபா 130,230,144 வரை தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தின் கப்பல் முகவர் செலவு மீதிகளில் 2023-05-15 ஆந் திகதியளவில் ரூபா 265,608 தொகை மற்றும் காலி துறைமுகத்தின் கப்பல் முகவர் செலவு மீதி ரூபா 3,853,376.09 வரை தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட முற்பணங்கள் பணமாக உரிய சேவைகளை வழங்கியதன் பின்னர் மிகுதியான முற்பணங்கள் மற்றும் மிகைக்கொடுப்பனவுகள் தொடர்பான விபரமான பட்டோலை மற்றும் காலப்பப்பாய்வு தொடர்பாக கவனம் செலுத்தி காலாவதியான மற்றும் அசைவற்ற மீதிகளை தீர்த:துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அதிகார சபையினால் கொள்வனவு செய்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்குனருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 331 மில்லியன் தொகையான முற்பண மீதி காணப்பட்டதுடன் அந்த மீதியில் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1.5 மில்லியன் மீதியும் 02 மாதங்களை மிகைத்த ரூபா 30 மில்லியன் மீதியும் 2022 திசெம்பர் 31 இல் | இந்த மீதிக்காக கணக்காய்வு குழுக் கூட்டத்தின் போது (02/2023 ஆம் இலக்க கூட்டம்) வழங்கிய அறிவுறுத்தல்களுக்குகிணங்க ஒரு குழுவின் மூலம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. மிகுதி ரூபா 329.5 மில்லியன் மீதியில் ரூபா 304.5 | உரிய கொள்வனவுகள் இடம்பெற்ற உடன் முற்பணங்களைத் தீர்த்து வைத்து உரிய கணக்குகளுக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது. | மில்லியன் அளவானவை தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி கோவைகளில் உரிய ஆவணங்களை பூரணப்படுத்திய உடன் தீர்த்துவைத்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2022 நவம்பர் 21 ஆந் திகதிய முகொ/முகி/கொ/41/2022 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 2.12 ஆம் பிரிவு மற்றும் 8.1 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்கு இலக்கம் 142342 இன் கீழ் காணப்படுகின்ற மூலதனச் செலவுகளுக்குரிய முற்பணக் கொடுப்பனவுகளில் காணப்பட்ட பழைய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2.7 மில்லியன் மீதி மற்றும் 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 134,841 மீதி தீர்த்துவைக்கப்படாது (மூலதனமாக்கப்படாது) காணப்பட்டது. மேலும் ரூபா 7.2 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 03 முற்பணக் கொடுப்பனவுகள் தொடர்பன செயற்திட்டங்களை இனங்காண முடியாமையின் காரணமாக மேலே கூறப்பட்ட முற்பணங்கள் மூலதனமாக்கப்படாது காணப்பட்டது. | 05 ஆண்டுகளை மிகைத்துள்ள 2,783,834.60 பணத்தை நீக்குவதற்கு அல்லது அடுத்துவரும் காலங்களில் பேணுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 134,841.17 பணத்தை மூலதனமாக்கி தற்பொழுது முற்பணக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. ரூபா 7,269,570 பெறுமதியயினைக் கொண்ட முற்பணக் கொடுப்பனவுகளின் 03 செயற்திட்டங்கள் தொடர்பான விபரம் இனங்காணப்பட்டுள்ளது. | உரிய கொள்வனவுகள் இடம்பெற்ற உடன் முற்பணங்களைத் தீர்த்துவைத்து உரிய கணக்குகளுக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம்** | | | |
| (i) 10(5) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் | ஏதாவது ஒரு ஆண்டில் மிகை காணப்படுமாகவிருந்தால் அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கழித்தல்களைச் செய்ததன் பின்னர் மிகுதியை திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்க வேண்டியதுடன் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்திற்கு இணங்க அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு | இணங்கிக் கொள்ளவில்லை. இலங்கை துறைமுக அதிகார சபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க இலங்கை துறைமுக அதிகார சபையினைத் தோற்றுவிக்கும் போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனத்தில் (Equity Capital) 8% உச்ச அளவுக்கு உட்பட்டு பங்கிலாபம் வழங்கப்பட்ட | நிதி அதிகாரச் சட்டத்தின் மற்றும் இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மிகை மற்றும் பங்கிலாபம் சம்பந்தமாக நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 30 ஆம் பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகள் | வழங்கிய நிதி ரீதியான பங்களிப்பின் அடிப்படையில் ஆண்டிற்கு 8 தசவீத்தினை திரண்ட நிதியத்திற்குச் செலுத்துதல் வேண்டும். 1979 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான 43 ஆண்டுகளில் அதிகார சபையினால் இலாபம் உழைத்த ஆண்டிற்காக மாத்திரம் உரிமை மூலதனத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய உச்ச அளவு பங்கிலாபம் ரூபா 15,383 மில்லியனாக இருந்ததுடன் திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,585 மில்லியன் அதாவது 10 சதவிதம் மாத்திரமாகும். எவ்வாறாயினும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 39,433 மில்லியனான வரிக்கு பின்னரான இலாபத்தில் ரூபா 985 மில்லியன் அதாவது 2 சதவிதம் மாத்திரம் பங்கிலாபமாக பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக பொதுத்திறைசேரிக்கு எந்த பணமும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் போது 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுக அதிகார சபையை தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 30(1)(c) பிரிவிற்கு இணங்க 8% ஆன ரூபா 600 மில்லியன் பணம் மற்றும் 2022 ஆம் ஆண்டில் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் 2022-10-31 ஆந் திகதிய கடிதம் மற்றும் PAM/208/2022 ஆம் இலக்க 2022-10-26 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 1000 மில்லியன் பணம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் மாத்திரம் செலுத்தப்பட்டது. அதற்கிணங்க இலங்கை துறைமக அதிகார சபையனால் மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்த மொத்த பணம் ரூபா 1,600 மில்லியன் (2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது) என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | எடுத்தல் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 11 ஆம் பிரிவு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையினால் நிலையான மற்றும் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 104,533 மில்லியனுக்காக நிதி அமைச்சிரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022-12-31 இல் உள்ளவாறு ஆண்டிற்கான குறுங்கால மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ய்யப்பட்ட பணத்திற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சின் மூலம் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையினால் அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் இலக்கம் 1646 மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் | பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பினை வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. அறிக்கைகளில் குறிப்பிட்ட தாமதங்களைத் தவிர்த்து நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நாளாந்த ஓட்ட | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பயணங்கள் தொடர்பான பொழிப்பினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2003 ஏப்ரல் 25 ஆந் திகதிய 10/2003 ஆம் இலக்க சுற்றிக்கை | மாத்திற்குப் பின் அடுத்துவரும் மாத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் 268(அ) ஆவது பொது படிவத்தில் எழுதப்பட்ட பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் தொடக்க பிரதியுடன் ஒவ்வொரு மாத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அட்டவணைகளையும் மாதாந்த பொழிப்பு அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | தாபனவிதிக் கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடத்தினை நிரந்தர அடிப்படையில் நிரப்பும் வரை அந்த வெற்றிடத்திற்கு அமைய அடிப்படையில் ஒரு உத்தியோகத்தினை சேர்த்துக்கொள்வதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவசர தேவைப்பாட்டினால் பற்றாககுறையினை நிரப்புவதற்கு அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்படுமாகவிருந்தால் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஒரு நிரந்தர உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கிண்ஙக நடவடிக்கை எடுக்காத 344 பதவிகள் 23 ஆண்டுகள் காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டன. | அதிகார சபையினால் பதில் கடமை பார்க்கும் அடிப்படைக்காக மேற்கொள்ளப்படுவதாவது உரிய பதவியின் செயற்பாடுகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றி துறைமுகத்தில் தொடர்ச்சியான சேவைகளின் வினைத்திறனை உறுதிப்படுத்தி அமுல்ப்படுத்துவதற்காகவாகும். அதன் போது காலத்திற்கு காலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் பொதுத் தீர்மானங்களின் காரணமாக வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஊழியரினை நியமித்தல் மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பம் காணப்படுவதனால் அறிக்கையில் காட்டப்பட்ட அவதானிப்புக்கள் இடம்பெறறன. | அதிகார சபையினால் காணப்படும் வெற்றிடங்களை பதில் கடமை பார்க்கும் அடிப்படையின்றி முறைப்படியான ஆட்சேர்க்கும் நடைமுறைக்கு இணங்க சேர்த்துக்கொள்ளப் பட்டு ஆட்சேர்ப்பு பூரணப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகாரசட்டத்தின் (v) ஆம் பந்தியின் 38(1)(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | கைப்பற்றப்பட்ட அல்லது அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் சுங்கத்தினால் அப்புறப்படுத்தப்படுமாகவிருந்தால் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் சுங்கத்தினால் அதிகார சபைக்கு செலுத்துதல் வேண்டும். எனினும், கைப்பற்றப்பட்ட 6 கொள்கலன்களுக்காக அதிகார சபையினால் அறவிட வேண்டிய ரூபா 22.5 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளவில்லை. இலங்கை சுங்கத்தினால் பறிமுதலர் செய்யப்பட்ட கொளடகலன்கள் சம்பந்தமாக சட்டமா அதிபர் திக்கைளத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கொள்கலன் செயற்பாட்டுகட்டணத்திற்காக மாத்திரம் இலங்கை சுங்கத்திற்கு விலைப்பட்டியல்கள் வழங்கப்படுவதுடன் நில வாடகைக் கட்டணம் அல்லது களஞ்சிய கட்டணத்திற்காக இலங்கை சுங்கத்திற்கு | துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் துறைமுகத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விலைப்பட்டியல்கள் வழங்கப்படுவதில்லை. எனவே கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கொளடகலன் செயற்பாட்டுக் கட்டணத்திற்காக (Wharf handling) தற்பொழுது இலங்கை சுங்கத்திற்கு உரிய விலைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது எனினும் இன்றுநுவரை உரிய கொடுப்பனவு நடவடிக்கை இடம்பெறவில்லை. | |
| (உ) | 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் மற்றும் 32 ஆம் பிரிவுகள் மற்றும் கேளிதாரர்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல் தொகுப்பின் 4.18 ஆம் பிரிவு மற்றும் சுகாதாரம் போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட 2019 யூன் 14 ஆந் திகதிய 2019 இன் உணவு (சுற்றாடல் பதிவுசெய்தல்) கட்டளை | பேக்கரி உணவு உற்பத்தியாளர்களால் அதில் குறிப்பிட்ட நிரணயிக்கப்பட்ட படிவத்தின் கீழ பதிவு செய்தலுக்காக விண்ணப்பித்து அந்த உணவு உற்பத்தி நிலையத்திற்கு அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொளள வேண்டிய போதிலும் சிற்றுண்டிச்சாலைகளை வழங்கும் பெறுகையின் போது கேள்விதார்ர்களுக்கு அவ்வாறுஅனுமதிப்பத்திரம் காணப்படுகின்றதா இல்லையா என்பது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுகையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக துறைமுக அதிகார சபைக்குள் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை உள்ளடக்கிய தொழில்நுட்ப குழுவிற்கு பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். இக்குழுவின் மூலம் பேகரி உற்பத்தி நிறுவனத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனுமதிப்பத்திம் சம்பந்தமாக தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்படாததுடன் அது சம்பந்தமான கேள்விப் பத்திரஙடகளில் உள்ளடக்குதலும் இடம்பெறவில்லை. | பெறுகையின் போது தேவையான அனுமதிப்பத்திரங்கள் உள்ளனவா என்பதனை பரீட்சித்துப் பார்த்து மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.i |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிறிக்கை | | | |
| | (i) 3.2 (i) ஆம் பந்தி மற்றும் 2013 சனவரி 23 அந் திகதிய DMS/F1/3/3-1 ஆம் இலக்க முகாமைத் | எந்தவொரு நிறுவனத்தினாலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரிம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் வரைபு ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்காக முகாமைத்துவ | அலுவலக தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க ஆட்சேர்க்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு 2022-03-31 ஆந் தகிதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினைப் பெற்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து முறைப்படியாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட கடிதம். | சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் துறைமுக அதிகார சபையின் ஊழியர் எண்ணிக்கை தாபன கட்டமைப்பு ஆட்சேர்ப்பு நடைமுறை என்பன இன்னுமொரு தடவை மீளாய்வு செய்யப்பட வேண்டுமென சரிசை அமைச்வு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ணைக்குழு மற்றும் துறைமுக அதிகார சபையின் | 2022 யூன் 22 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது உத்தேசிக்கப்பட்டவாறு போட்டி இறங்குதுறைகளின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டுமென தெரியப்படுத்தப்பட்டதுடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.4 ஆம் பிரிவு | புதிய ஒரு பதவியினை உருவாக்குவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முன்னர் ஒழுங்கு முறையாக தொழிலலை மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் 10 பிரிவுகளின் ஊழியர் எண்ணிக்கையில் 282 மிகைகள் காணப்பட்டதுடன் தொழிலை மதிப்பீடு செய்தல் அல்லது மேற்கொள்ளப்படாது அந்த பிரிவுகளுக்கு ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | 2013 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கிகாரத்தினைப் பெற்ற ஊழியர் எண்ணிக்கையினுள்ஒவ்வொரு பதவியினரையும் சார்ந்த ஊழியர் எண்ணிக்கையானது புதிய நிருவாக கட்டிடத்திற்கு கொண்டுவருவதனை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்ட ஊழியர் எண்ணிக்கையாக இருந்த போதிலும் அவ்வாறு இடம் அமர்த்துவதற்கு முடியாததன் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையையும் பதவிக் கடமைகழள பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளும் போது காணப்படுகின்ற நிலைமையின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிற்கும் அங்கீகரித்த ஊழிய்ர் எண்ணிக்கையை உரிய முறைப்படி கணித்து சேர்த்துக்கொள்ளல் மற்றும் தொழில் மதிப்பீட்டினை மேற்கொள்ளல் சிக்கனமற்றதாக இருந்த போதிலும் எதிர்காலத்தில் | முறைப்படியான தொழில் மதிப்பீட்டினை மேற்கொண்டு புதிய பதவியணியினையும் ஆட்சேர்ப்பு நடைமுறையையும் துரிதமாக தயாரித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கைக்கு இணங்க பிரிவுகளைச் சார்ந்த பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பினை மேற்கொளளலாம். | |
| (iii) | 3 ஆம் அத்தியாயத்தின் 3.4 ஆம் பிரிவின் ix ஆம் உபபிரிவு | ஏதாவது விசேட சந்தர்ப்பங்களில் பதில் கடமை பதவியை உருவாக்கி கொள்கையில் அது ஒரு ஆண்டு கால எல்லைக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் பதில் கடமை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு ஆண்டு கால எல்லையை மிகைத்து 13 பதவிகளுக்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அதிகார சபையில் பதில் கடமை பார்க்கும் அடிப்படையாகக் நியமித்தல் மேற்கொள்ளப்படுவதாவது உரிய தபவியின் செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்றி துறைமுகத்தில் தொடர்ச்சியாக சேவைகளின் வினைத்திறனை உறுதிப்படுத்தி அமுல்ப்படுத:துவதற்காக அதன் போது காலத்திற்கு காலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற சுற்றிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் பொது தீர்மானத்தின் காரணமாக வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளுக்காக நிரந்தரமாக ஒரு ஊழியரினை நியமிக்க முடியாதுள்ளது. | இந்த வெற்றிடங்களை முறைப்படியாக நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கையுடன் வழங்கப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேடு | | | |
| (i) | 6 ஆவது அத்தியாயத்தின் 2(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் | அரசாங்கத்திற்க உரிமையுள்ள கடைசி 02 ஆண்டுகளின் ஒத்த தன்மையான வருடாந்த ஆகக் குறைந்த வருமானம் ரூபா 30 மில்லியனை உழைக்கின்ற அரசாங்க நிறுவனங்களின் மினை நிதிகளை முதலீடு செய்வதற்காக ஒரு முதலீட்டுக் குழு (Investment Committee) தோற்றுவிக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அக்குழுவின் ஆகக்குறைந்த | இணங்கிக்கொள்ளவில்லை. மிகை நிதியை முதலீடு செய்வதற்காக 2016 யூலை 13 ஆந் திகதிய PA/HD/28 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அங்கிகாரத்தில் குறிப்பிட்ட அங்கத்தவர்கை உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள் சம்பந்தமாக குழு அங்கீகாரத்தினைப் | தேவைக்கேற்ப முதலீட:டக் குழுவினை தோற்றுவித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கத்தவர்கள் 05 நபர்களை உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் அதிகார சபையனால் அவ்வாறான ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படும். | |
| (ii) | 2.3 ஆம் பிரிவு | அனைத்து அரசாங்க தொழில் முயற்சிகளும் தமது நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அவை மேற்கொள்ளப்படுகின்ற முறைமை தொடர்பான நடைமுறைக் கையேடும் நிருவாக மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கான நடைமுறைக் கையேடும் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று காலத்திற்கு காலம் மீளாய்வு சய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுகின்ற “நிதி நடைமுறைக் கோவை- 2013” கடன் கால எல்லை தொடர்பான எற்பாட்டினை உள்ளடக்கிய நடைமுறைக் கையேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நடைமுறைக் கோவை 2013- இனை நாளதுவரையாக்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | நிதி நடைமுறைக் கோவைக்குரிய நாளதுவரையாக்குதலினை துரிதமாக மேற்கொண்டு உள்ளகக்கட்டுப்பாட்டுப் பலவீனத்தை நீக்குதல் வேண்டும். |
| (ஏ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் மயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள அரசாங்க தொழில் முயற்சிக்காக தோற்றுவிக்கப்பட்ட நல்லாட்சி வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 2.2.5 ஆம் பிரிவு | துணைக் கம்பனிக்காக தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகரித்த துணைக் கம்பனி கொள்கை (Board approved Subsidiary Pollicy) தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க க | இதற்காக செயற்பாட:டு குழு (Task force) நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு 2023-05-22 ஆந் தகிதி துறைமுகங்கள் கப்பல் விமான சேவைகள் கௌரவ | அதிகார சபைக்கு துணைக்கம்பனி செயற்படுவதனால் துணைக்கம்பனிக்காக பணிப்பாளர் சபை அங்கிகரித்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கபட வேண்டிய போதிலும் அதிகார சபையின் துணைக் கம்பனிக்காக அவ்வாறான கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சருடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அதற்கிணங்க நிறுவன ரீதியான திட்டம் மற்றும் துணைக்கம்பனியின் கொள்கையின் முதலாவது வரைபினை துரிதமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | துணைக்கம்பனி ஒரு கொள்கையை தயாரித்து அதற்கிணங்க துணைக் கம்பனி சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.2 ஆம் பிரிவு | கம்பனிகள் அதிகாரச் சட்டத்தை தவிர்த்து ஏனைய வகையில் உருவாக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்காக செயலாற்றல் மீளாய்வு கூட்டம் நடாத்தப்பட வேண்டியதுடன் அக்கூட்டம் ஐந்தொகை திகதியிலிருந்து 5 மாதங்களுக்குள்ளும் மற்றும் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னரும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் அவ்வாறான ஒரு கூட்டம் நடாத்தப்படவில்லை. | அதிகார சபையின் செயலாற்றல் மீளாய்வு கூட்டம் 2023 யூலை 31 ஆந் திகதி நடாத்வதற்கு நிர்ணயித்து பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பின்னர் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயலாற்றல் மீளாய்வு ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (iii) | 4.3 ஆம் பிரிவு | ஆபத்துக் குழு ஆகக் குறைந்தது நிறைவேற்றுத் தரம் அல்லாத மூன்று (03) பணிப்பாளர்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியதுடன் மூன்று மாதத்திநற்குஒரு தடவை குழுக் கூட்டத்தினை நடாத்த வேண்டிய போதிலும் 2022 ெப்பரவரி 25 ஆந் திகதி நியமிக்கப்பட்ட ஆபத்துகுழுவில் தற்பொழுது இரண்டு (02) அங்கத்தவர்கள் மாத்திரம் உள்ளடங்கியிருந்ததுடன் ஆபத்து குழு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடியிருக்கவில்லை. | 2023-04-20 ஆந் திகதி நடைபெறடற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஆபத்து குழு (Risk Committee) நியமிக்கப்பட்டது. | குழு முறைப்படியாகக் கூடி அத்தியவசியமான ஆபத்துக்களை இணங்காணுதல் முதலியவை துரிதமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஐ) | 2022 நவம்பர் 21 அந் திகதிய முகொ/முகி/கொ /41/2022 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் உள்ளக் சுற்றறிக்கை 2-12 ஆம் பிரிவு. | அனைத்து பிரிவுகள் மற்றும் பிரிவுத் தலைவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களை உரிய ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் பல்வேறு பரிவுகளினால் 37 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொண்ட முற்பணங்கள் ரூபா 16.62 மில்லியனாகக் | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா 5.8 மில்லியன் மீதியில் 2020-10-28 ஆந் தகிதி அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 391,399.34 தொகையான மற்றும் 2022-04-22 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 137,500.00 முற்பணம் தீர்த்துவைக்கப்படாததனால் | முற்பணம் வழங்கியதன் பின்னர் அவற்றினை மிகவும் விரைவாக முறைப்படியாக தீர்த்து வைப்பதற்டகு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்பட்டதுடன் அந்த மீதியினுள் இரண்டு ஆண்டுகளை மிகைத்த ரூபா 3.5 மில்லியன் மற்றும் 6-12 மாதங்களுக்கு இடைப்பட்ட ரூபா 5.8 மில்லியன் தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது | அப்பணத்தை அறவீடு செய்வதற்காக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஒ) | அதிகார சபையின் நிருவாக செயற்பாட்டு ஒழுங்குபடுத்துதல் கோவையின் 9.5.2.1 பிரிவு | ஒரே பிரிவில் ஆறு ஆண்டுகால சேவைக் காலத்தை பூர்த்திசெய்த நிறைவேற்று தரம் அல்லாத செயற்திட்ட மீளாய்வு அபிவிருத்தி உதவியாளர் முகாமைத்துவ உதவியாளர் வேலை உதவியாளர், (நானாவித செயற்பாட்டு உதவியாளரும் சுகாதார ஊழியரும்) சாரதிகள் முதலிய பதவி வகிக்கும் 39 உத்தியோகத்தர்கள் பொது இடமாற்று முறைமையின் கீழ் ஏனைய பிரிவுகளின் சேவைக்காக இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது இடமாற்றத்தினை மேற்கொள்ளும் போது சேவையில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் சில பிரிவுகளில் மிகவும் சிறிய அலவானவர்கள் மாத்திரம் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் சுற்றிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் நிருவாக செயல் ஒழுங்குபடுத்தல் அேகாவையில் காட்டப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் பொது இடமாற்றத்தினை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாபன விதிக் கோவை/ நிருவாக செயல் ஒழுங்குபடுத்தல் கோவையின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் ேண்டும். |
| (ஓ) | 2003 இன் 09 ஆம் இலக்க பயன்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவு மற்றும் 2022 மே 02 ஆந் தகிதிய 2278/02 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி | ஏதாவது ஒரு உற்பத்தியாளர், தயாரிப்பாளர், வழங்குனர், பகிர்ந்தளிப்பாளர் அல்லது வியாபாரியினால் வெள்ளை முட்டை ரூபா 43 இற்கு பழுப்பு /சிகப்பு முட்டை ரூபா 45 உச்ச அளவு சில்லறை விலையினை விட அதிக வழிலையில் விற்பனை செய்தல் வழங்குதல், வியாபாரம் செய்வதற்காக காட்சிப்படுத்தப்படாதிருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டளையானது 2022 ஆகஸ்ட் 19 ஆந் திகதியிலிருந்து கணக்காய்வு ஐய வினாத் திகதி வரை அமுல்ப்படுத்தப்படுவதுடன் அதிகார சபையினால் 2022 ஆகஸ்ட் 19 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் தகிதி வரை முட்டை கொள்வனவு செய்யும் போது | உணவுப் பட்டியவைலத் தயாரிக்கும் போது ஊழியர்களின் ஊட்டச்சத்து மற்றும் ருசி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதனால் வாரத்தின் உணவுப் பட்டிலுக்கு முட்டையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. முட்டைகளைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினால் விதிப்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைவினை மிகைத்து வழங்குனரினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனவே தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு அந்த விலைகளுக்கு மத்தியில் ஆகக்குறைந்த விலையினை | பொதுப் பயன்பாட்டு அதிகார சபை விதித்துள்ள கட்டுப்பாட்டு விலையின் கீழ் முட்டை கொள்வனவு இடம்பெறுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுப்பாட:ட விலை தொடர்பாக கவனம் செலுத்தப்படாது கட்டுப்பாட்டு விலையினை மிகைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேட்பு மனுவின் கீழ் முட்டை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்ததுடன் அதனால் அதிகார சபைக்கு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவடுவதற்காக ரூபா 1.1 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | சமர்ப்பித்த வழங்குனர் கேள்விச் சபையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு முட்டை கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஔ) | 2003 இன் 09 ஆம் இலக்க பொதுப்பயன்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபை (திருத்திய) அதிகார சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் செயற்பாட்டு 2022 மே 02 ஆந் திகதிய 2278/02 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி | எவராவது ஒரு உற்பத்தியாளர் தயாரிப்பாளர், வழங்குனர், பகிர்ந்தளிப்பாளர் அல்லது வியாபாரியினால் வெள்ளை/ சிகப்பு சம்பா அரிசி (உள்நாட்டு) 1 கிலோகிராம் ரூபா 230 உச்சஅளவு சில்லறை விலையினைவிட அதிக வியைில் வியாபாரம் செய்தல், வழங்குதல் வியாபாரம் செய்வதற்கு முன்வைத்தல் அல்லது வியாபாரம் செய்வதற்காக காட்சிப்படுத்துதல் செய்யாதிருக்க வேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. இப்பணிப்புரை 2022 மே 02 ஆந் திகதியிருந்து கணக்காய்வு ஐய வினாத் திகதி வரை அமுல்ப்படுத்தப்பட்டதுடன் அதிகார சபையினால் 2022 யூன் யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது வெள்ளை சம்பா அரிசியினை கொள்வனவு செய்யும் போது கட்டுப்பாட்டு விலை தொடர்பாக கவனம் செலுததாது கட்டுப்பாட்டு விலையினை மிகைத்து சமர்ப்பித்த கேள்விழ விலைமனுக்களின் கீழ் அரிசி கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்ததுடன் அதில் அதிகார சபைக்கு கவனத்திற்கு எடுத்துக் கொண்ட 03 மாதங்களக்காக ரூபா 1.4 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2022 யூன் யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்காக வெள்ளை/சிகப்பு அரிசி கொள்வனவு செய்யும் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் சமர்ப்பித்த விலைகள் அச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அரிசிக்காக விதித்த கட்டுப்பாட்டு விலையினை விட அதிகரித்திருந்த போதிலுரும் துறைமுக அதிகார சபையினால் சமையலறைப் பிரிவில் காணப்பட்ட தேவைப்பாட்டின் அடிப்படையில் கேள்வியின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட விலைக்கு இணங்க அரிசியை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பொதுப்பயன்பாட்டு அதிகார சபை விதித்துள்ள கட்டுப்பாட்டு விலையின் கீழ் அரிசியினை கொள்வனவு செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |
| (க) | 2013 சனவரி 23 ஆந் திகதிய DMS/FI/3/3-1 ஆம் இலக்க இலங்கை துறைமுக | நலன்புரி மற்றும் கைத்தொழில் ஒருங்கிணைப்பு பிரிவின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 122 ஆக இருந்ததுடன் 2022 நவம்பர் 28 ஆந் திகதி | சமயலறைப் பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பல நானாவித கடமைகள் காணப்பட்டதனால் அவறடறின் தன்மையின் அடிப்படையில் தற்போதுள்ள ஊழியர்கள் அனைவரையும் | ஊழியர்களைச் சேர்த:துக்கொள்ளு ம் போது ஊழியர் தேவைப்பாடு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து முறையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகார சபையின் திருத்திய மனித வளங்கள் திட்டத்திற்காக மகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு இணங்க மற்றும் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதிய மாசகொ/பா/01/ஏ .வி/2022 ஆம் இலக்க கடிதம். | மாசகொ/பா/01/ர.வி/ 2022 ஆம் இலக்க கடிதத்திற்கு இணங்க 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதியில் சமயலறைப் பிரிவில் 167 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தன ர். அதற்கிணங்க சமயலறைப் பிரிவின் ஊழியர் எண்ணிக்கையில் 45 மிகைகள் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | சேவையில் ஈடுபடுத்தும் தேவைப்பாடு காணப்பட்டது. தற்பொழுது துறைமுக அதிகார சபையில் புதிய மனிதவளங்கள் திட்டத்தினை தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதனை தயாரிததன் பின்னர் மிகையான ஊழியர்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டினை மேற்கொண்டு அவசியமான ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (கா) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 0BD/CBP/01/01 /04-2022 ஆம் இலக்க நிதி அமைசசினால் வழங்கப்பட்ட அரசாங்க செலவுகளைக் கட்டுப்படுத்தும் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3 (xiii) ஆம் பந்தி | உள்ளபடியான சேவையில் ஈடுபட்டுள்ளமை பற்றி/ சமூகமளித்தல் உறுதிப்படுத்தப்படுத்தப்படாது மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து மேலதிக நே வேலைக் கொடுப்பனவுகளையும் நிறுத்துதல் மற்றும் பல்வேறு வகையில் பொற்றுக்கொள்ளப்படுகினற மேலதிக நேர வேலைப்படியின் மொத்தம் சம்பளத்தினை மிகைக்காத வகையில் நடவடிக்கை எடுக்கக் கூடிய ஒரு நடைமுறையினைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் சமயலைறைப் பிரிவு 01 இல் ஊழியர்களுக்கு 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதிய FD/SAI/2022/03 ஆம் இலக்க கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க 2022 சனவரியிலிருந்து யூலை மாதம் வரை அவ்வாறு சம்பளத்தை மிகைத்து மேலதிக நேர வேலைப்படியினைக் பெற்றுக்கொண்ட 72 ஊழியர்கள் இருந்ததுடன் அவர்களுக்காக வழங்கிய மேலதிக நேர வேலைக்கொடுப்பனவினையும் உள்ளடக்கி மொத்த மேலதிக நேர அட்டவணைப் படியின் பெறுமதி ரூபா 50.9 மில்லியனாகும். அதற்கிணங்க முகாமைத்துவத்தினால் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை என | மத்தியப்படுத்தப்பட்ட சமயலறைப் பிரிவன் சமையலறைகளில் சேவையாற்றுகின்ற ஊழியர்கள் 24 மணித்தியால தவணை முறைமைக்கான சேவைக்காக சமூகமளித்ததன் பின்னர் அவற்றில் 08 மணித்திலாங்கள் மேலதி நேர வேலையாக கருதப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தயாரக்கப்படுகின்ற உணவின் அவினை கவனத்திற்கு எடுத்து விசேட மேலதிக நேர வேலைப் படிக் (Target OT) கொடுப்பனவுக் கடமைகளின் தன்மையின் அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவானது கடந்த காலத்திலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே தேனீர் வழங்கல் பிரிவின் மேலதிக நேர வேலையை கணிப்பீடு செய்தலும் அப்பிரிவின் கடமைகளின் தன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மேலதிக நேர வேலைக் கொடுப்பனவின் நடைமுறையானது அக்காலத்திலிருந்து சமயலறைப் பிரிவில் அமுல்ப்படுத்தப்படுகின்ற நடைமுறையாவுதுடன் அதனை மாற்றம் செய்தலானது | மேலதிக நேர வேலைப்படியினை வழங்கும் போது அது பற்றி மிகவும் அக்கறையுடன் நடவடிக்கை எடுத்து தேவையற்ற வகையிலர் மேலதிகமாக மேலதிக நேர வேலைப்படியிளை வழங்காதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவவாறே சமயலறைப் பிரிவில் தற்பொழுது பயன்படுத்துகின்ற மேலதிக நேரவேலைத் திட்ட முறைமைக்காக இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என முகாமைத்துவத்தினால் தெரிவிக்கப்பட்டது. | ஊழியர்களிடையே குழப்ப நிலையை உருவாக்குதல் மற்றும் கைத்தொழில் சமாதானத்திற்கு தடை ஏற்படுவதற்கும் காரணமாக அமைக்கின்றது. எவ்வாறாயினும் இது சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கி) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5:3:1 ஆம் பிரிவு | அரசாங்கத்தின் வீட்டில் குடியிருக்கும் உத்தியோகத்தர்ரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகையாக அவர் திருமணமானவராயின் மாதாந்த சம்பளத்தில் 10 சதவீதம் திருமணமாகாதவராயின் மாதாந்த சம்பளத்தில் 5 சதவீதமுமாக அரசாங்கத்திற்கு வாடகை அறவீடு செய்பப்படுதல் வேண்டும். அதிகார சபையின் நிருவாக செயற்பாட்டு ஒழுங்குபடுத்துதல் கோவையின் (X) ஆம் அத்தியாயத்தில் அடங்கியிருக்காத ஏதாவது விடயமாக இருந்தால் அது சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையில் அடங்கியுள்ள ஏற்பாடு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்காக தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை துறைமுக அதிகார சபையின் நிருவாக செயற்பாட்டுக் கோவையின் 330 மற்றும் 331 ஆம் பந்திகள் மற்றும் அதற்கு மேலதிகமாக அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வீட:டு வாடகை சம்பந்தமாக 02/2021 ஆம் இலக்க 2021-01-31 ஆந் திகதிய சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுலவதனால் தாபனவிதிக் கோவைக்கு இணஙக நவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு இல்லை மேலும் திருமணமாகாதவர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தினை வழங்குதல் இடம்பெறுவதில்லை. | உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையை அறவீடு செய்யும் போது உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கீ) | இலங்கை துறைமுக அதிகார சபையின் 2021 சனவரி 30 ஆந் திகதிய 02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் I மற்றும் II ஆம் பிரிவு | (i) குடியிருக்கும் காலப்பகுதி 05 ஆண்டுகளை பூர்த்திசெய்ததன் பின்னர் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருப்பதற்காக மீண்டும் விண்ணப்பப்பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 05 ஆண்டுகளை மிகைத்து ஒரே | சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருப்பதற்காக சேவைத் தேவைபடபாட்டின் அடிப்படையிலும் புள்ளி வழங்கும் அடிப்படையிலும் மீண்டும் சமர்ப்பிக்க விணண்ணப்பப் படிவங்களை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும் என | உத்தியோகபூர்வ இல்லங்கை மீஒ்டும் றெ்றுக்கொள்வதற்கு தேவை ஏற்படுமாயின் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருக்கும் 399 உத்தியோகத்தர்கபள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய இல்லங்களில் குடியிருப்பதற்காக புதிய விண்ணப்பப்பத்திரங்கள்/உடன்படிக்கையை புதுப்பின்கும் விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 05 ஆண்டுகளை மிகைத்து குடியிருப்பாலர்களை நீக்குவது சம்பந்தமாக வீடுகள் குழுவினால் இதுவரை தீர்மானம் எடுக்காத்திருந்ததனால் விண்ணப்பத்திரங்களை சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத:துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான குடியிருக்கும் காலப்பகுதியானது முதலாவது வீட்டினை வழங்கிய திகதியிலிருந்து 05 ஆண்டுகள் உச்ச அளவிற்கு மட்டுப்படுதப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதி பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் 06 மாத காலம் குடியிருக்கும் உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தில் இரண்டு மடங்கு செலுத்த வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகள் வரையான மற்றும் ஆண்டுகள் 06 மாதங்கள் மிகைத்து மற்றும் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் உரிய உத்தியோகபூர்வ இல்லங்களிலிருநது வெளியேறாது தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 399 ஆக இருந்தது. | இலங்கை துறைமுக அதிகார சபையில் 2021-01-31 ஆந் திகதிய 02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க தற்பொழுது உத்தியோகபூர்வ இல்லங்களில் 05 ஆண்டுகளை மிகைத்து வசிக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து வாடகையாக இரு மடங்கு அறவிடப்படுகின்றது. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் ஊழியர்கள் சம்பந்தமாக முகாமைத்துவம் தீர்மானம் எடுத்ததானது ஏதும் உளவியல் காரணங்களின் அடிப்படையில் அவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்றுதல் சிக்கலானது என்பதனால் அமுல்ப்படுத்துவதற்காகவும் அதற்கிணங்க 02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கைக்காக திருத்தம் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் இன்னும் தங்கியிருக்க வேண்டிய தேவை ஏற்படுமாயின் கொடுப்பனவு செய்து உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 வரிப்பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச் சட்டம்.** | | |
| (i) 3(2)(இ)(iii) ஆம் பிரிவின் பிரகாரம் (இ)(i) மற்றும் (ii) உப பந்திகளில் காட்டப்பட்டுள்ள சேவைகள் மற்றும் முதலாவது பட்டோலையின் II ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடுவிக்கப்பட்ட சேவையை தவிர்த்து இலங்கையில் ஏதாவது சேவையினை வழங்குவதன் மூலம் கிடைக்க வேண்டிய பணம் பணமாக கிடைத்தாலும் அல்லது கிடைக்காத போதிலும் வரிக்கு உட்பட்ட வருமானமாக கருதப்படுவதுடன் அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக வரியினை அறவிடக்கூடிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது அரசிறை வருமானம் (Royalty Income) வரியினை அறவிடக்கூடிய வருமானத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | இணங்கிக்கொள்ளவில்லை. சமூக பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 02 இற்கு இணங்க இந்த அதிகாரச்சட்டத்துடன் தொடர்புபடும் வகையில் காட்டப்பட்டிருந்ததானது (a),(b),(c),(d) என்பவற்றின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள வரிக்கு உட்பட்ட வருமானங்களுக்காகவாகும். மேலும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு வரி அதிகாரச்சட்டத்தின் 3(2)இ)(iii) ஆம் பிரிவில் அடங்குகின்ற மேலே குறிப்பிட:டள்ள Part i தொடர் இலக்கம் 02 இன் கீழ் காட்டப்பட்டுள்ள வரைவிலக்கணத்திற்கு இணங்கியதாக அரசிறையானது (Royalty Income) சேவை வழங்கலுக்காக உழைக்கப்பட்ட வருமானம் அல்லாததனால் இந்த வருமானத்தை நீக்கி SSCL வரிப்பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சமூக பாதுகாப்பு வரியினை ஒதுக்கீடு செய்யும் போது அந்த வரிக்கு உட்பட்ட அனைத்து வருமானங்களும் உரிய கணிப்பீட்டிற்கு ஈடுபடுத்ததுல் வேண்டும். |
| (ii) முதலாம் பட்டோலையின் II ஆம் பகுதியின் பிரகாரம் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை கணிக்கீடு செய்யும் போது வரிக்கு உட்பட்ட வருமானங்களை கணக்கீடு செய்யும் போத பூச்சிய விகிதத்தினி கீழ் பெறுமதி சேர் வரிக்கு உட்படுகின்ற வருமானத் தொகுதியினை (VAT Zero Rated Revenue) களஞ்சிய கட்டணம் உபகரணங்களை வாடகைக்கு வழங்கும் வருமானம் ஆகிய ரூபா 1,072 மில்லியன் வருமானம் சமூக பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்தல் வரியிலிருந்து விடுவிக்கப்பட்ட வருமானமாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 26.8 மில்லியன் தொகையான சமூக பாதுகாப்பு வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளவில்லை. 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு வரி அதிகாரசட்டத்தின் I ஆவது பட்டோலையின் II ஆவது பகுதியில் வரிவிடுதலை சேவைகள் (Exempted Services) காட்டப்பட்டிருந்ததுடன் Item 05 மற்றும் Item 08 துறைமுக அதிகார சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பல சேவைகள் Export related | சமூக பாதுகாப்பு வரி கணிப்பீட்டின் போது அதிகாரச் சட்டத்திற்கு இணங்க விடுவிக்கப்பட்ட பொருட்கள் மாத்திரம் விடுவிப்பாகக் கருதி உரிய கணிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | Services - ஆனதுடன் அது ஒவ்வொரு Revenue Cetegories களுக்கு இணங்க உறுதியாக ஒதுக்கீடு செய்து இனங்காண வேண்டியதனால் மேற்கூறிய செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் பிரிவுகளினதும் உதவியுடன் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2022 இன் 14 ஆம் இலக்க மிகைக்கட்ட வரி அதிகாரச் சட்டத்தின் 2(1)(அ) பிரிவின் பிரகாரம் 2017 இன் 24 ஆம் இலக்க வருமானவரி அதிகாரச் சட்டத்திலுள்ள டீஏற்பாடுகளின் பிரகாரம் கணிக்கப்படுகின்ற 2020 ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதியில் ஆரம்பிக்கப்படும் மதிப்பீட்டு ஆண்டிற்காக வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 2,000 மில்லியனை மிகைக்கின்ற தனி நபரின் பங்குடமை வியாபாரம் அல்லது கம்பனி வரி அறவிடக்கூடிய வருமானத்தின் அடிப்படையில் இருப்பத்தைந்து கதவீத அளவில் அளவீடு செய்யப்படுதல் வேண்டும். 2020/21 ஆம் ஆண்டில் அதிகார சபையின் வரி அறவிடக்கூடிய வருமானமாகிய ரூபா 4,420.9 மில்லியனின் கணிப்பீடு செய்கையில் மிகைக்கட்டண வரி 1,105.2 ஆக இருந்தும் அதிகாரசபை ரூபா 1,952.2 மில்லியனை மிகைக்கட்டண வரியாக செலுத்தியிருந்தது. மேலும் இவ்வாறு மிகையாக செலுத்திய ரூபா 847 மில்லியன் பணம் 2022 இன் 14 ஆம் இலக்க மிகைக்ட்டண வரி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படவில்லை. 2020/21 ஆண்டு தொடர்பாக கோவை செய்யப்பட்ட வருமானவரி அறிக்கைக்கு இணங்க வரி அறவிடக்கூடிய வருமானமான ரூபா 7,809 மில்லியனை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,952.2 மில்லியன் மிகைக் கட்டண வரி 2022 ஏப்ரல் மாதம் கொடுப்பனவு செய்யப்பட்டது. எனினும் 2022 செப்தெம்பர் மாத்தின் போது கோவை செய்யப்பட்ட வருமான வரி அறிக்கையை மிண்டும் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதன் போது வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 4,420.9 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. அதனால் இவ்வாறு ரூபா 847 மில்லியன் மீகைக்கட்டண வரி மிகையாக செலுத்துவதற்கு காரணமாக இருந்ததுடன் மிகைக்கட்டண வரி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் அறவீடு செய்வதற்காக மிகைக்கட்டண வரி அறிக்கையினை திருத்தம் செய்து வருமானவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மிகையாக செலுத்திய மிகைக் கட்டண வரியையும் துரிதமாக மீண்டும் அறவீடு செய்வதற்கு அல்லது செலுத்த வேண்டிய வருமான வரிகளிலிருந்து எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் இலாபம் ரூபா 37,870 மில்லியன் மற்றும் அதிகார சபையின் இலாபம் ரூபா 42,319 மில்லியனாகும். முன்னைய ஆண்டில் தொகுதியானதும்

அதிகார சபையினதும் இலாபம் முறையே ரூபா 19,843 மில்லியன் மற்றுமட் ரூபா 20,695 மில்லியனாக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தொகுதியினதும் அதிகார சபையினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 18,027 ஆலும் ரூபா 21,624 ஆலும் அதிகரத்திருந்தது. அதிகார சபையினதும் முன்னைய ஆண்டிற்கான ரூபா 45,455 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 68,408 மில்லியன் வரை அதிகரித்திருந்து மற்றும் ஐக்கிய குடியரசு டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி குறைவடைதல் மற்றும் மீளாய்வாண்டிற்கான வருமானம் அதிகரித்தல் மேலே காட்டப்பட்டுள்ள நிதி விளைவுகள் அதிகரித்தல் தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு புகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் ரூபா 22,953 மில்லியனால் அல்லது 50.5 சதவீத்தினால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 10,236 மில்லியனால் அல்லது 83.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு நடவடிக்கைகள் குறைவடைந்திருந்தும் நாணயமாற்று விகிதத்தினை அதிகரிப்பு இற்காக பிரதான தாக்கமளித்திருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நேரடிச் செலவு மற்றும் நிருவாகச் செலவு முறையே 28.7 சதவீத்தினால் மற்றும் 44.1 சதவீத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் எரிபொருளின் விலை அதிகரித்தல் மற்றும் மின்சார விலைப்பட்டியல்களின் கட்டணம் அதிகரித்தல் நேரடிச் செலவுகள் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### (அ) துறைமுக அதிகாரச பையின் மற்றும் ஏனைய இறங்கு துறைகளின் கொள்கலன் செயற்பாட்டு (Container Handling) நடவடிக்கை

2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களை நகர்த்துதலினை உள்ளடக்கிய செயற்பாட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 05 இறங்குதுறைகள் காணப்படுவதுடன் அவற்றில் ஜயா கொள்கலன் இறங்குதுறை, சமகி கொள்கலன் இறங்குதுறை, மற்றும் கிழக்கு கொள்கலன் இறங்குதுறை முழுமையாக துறைமுக அதிகாரசபைக்குரியவையாகும். ஏனைய இரண்டு இறங்கு துறைகளான கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை (C.I.C.T) மற்றும் தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை (S.A.G.T) இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு 85 சதவீதம உரிமையின் அடிப்படையில் 35 ஆண்டுகளுக்கு நிர்மாணம் செயற்பாடு மற்றும் ஒப்படைத்தல் (Built Operation and Transfer) என்ற அடிப்படையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை கொழும்பு துறைமுகத்தின் அனைத்து இறங்குதுறைகளிலும் உள்நாட்டு மற்றும் மீள் ஏற்றுமதியாக கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொண்ட முறைமை தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | இ.து.அ (SLPA) | | தே.ஆ,நு.இ (SAGT) | | கொ.சா.கொஇ (CICT) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| மீள் ஏற்றுமதி செய்தல் (Transhipments) | 1,633,176 | 1,846,264 | 1,481,513 | 1,521,373 | 2,520,946 | 2,482,410 | 5,635,685 | 5,850,047 |
| உள்நாடு (Domestic) | 256,318 | 321,121 | 229,711 | 265,285 | 544,201 | 612,649 | 1,030,230 | 1,199,055 |
| மீள் ஏற்றுதல் (Re- stowing) | 36,401 | 30,949 | 40,962 | 52,035 | 118,906 | 117,275 | 196,269 | 200,256 |
| | 1,925,895 | 2,198,334 | 1,752,236 | 1,838,693 | 3,184,053 | 3,212,331 | 6,862,184 | 7,249,358 |

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் கொழும்பு துறைமுகத்தின் மொத்த கொள்கலன் செயற்பாடுகள் மற்றும் மீள்கப்பலில் ஏற்றுதலில் குறைவு (பின்னடைவு) காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் துறைமுக அதிகார சபையின் கொள்கலன் செயற்பாடுகளின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 2,198,334 இலிருந்து 1,925,895 வரை அதாவது 12.4 சதவீத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த கொள்கலன் நகர்வுகளில் அதிகார சபை 28 சதவீதமும் தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை (S.A.G.T) 26 தசவீதம் கொழும்ப சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி (C.I.C.T) 46 சதவீதமாகவும் சந்தைப் பங்கிற்கு உரிமை கொண்டிருந்தன. கொழும்பு சர்வதேச கொளடகலன்ட இறங்குதுறைக் கம்பனி (C.I.C.T) உயர்ந்த பங்களிப்பினைக் கொண்டிருந்ததுடன் தற்பொழுது துறைமுகத்தில் அமைந்துள்ள 14.25 மீற்றர்களுக்கு மேற்பட்ட கப்பல்கள் வருகைதரக் கூடிய ஒரே இறங்குதுறை அந்த இறங்கு துறையாக இருப்பது அதற்கான காரணமாக இருந்தது.

(iii). அதிகார சபையின் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கை சம்பந்தமான இறங்குதுறைகளை பயன்படுத்துதல் விகித்தினை (Terminal Occupancy Ratio) கவனத்திற்கு எடுத்து பார்க்கின்ற போது 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை அது முறைப்படியாக 64, 70, 72, 70 மற்றும் 63 ஆக இருந்தன. அதற்கிணங்க அதிகார சபையின் இறங்குதுறைகளை பயன்படுத்தும் விகிதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக அதிகரித்து 2021 ஆம் ஆண்டிலிருந்து குறைவடைந்துள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கடற்படை கப்பல்களின் வருகை சம்பந்தமாக கவனித:துப்பார்த்த போது 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களுக்கு வருகைதந்த கப்பல்களில் 17 சதவீதம் அளவில் குறைவு காணப்பட்டதுடன் அது 2018 ஆம் ஆண்டின் போது 4,933 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது 4,073 ஆக இருந்தது. மத்திய மற்றும் சிறிய அளவான கப்பல்களுக்குப் பதிலாக பெரிய அளவிலான கப்பல்பகளின் வருகை இதற்கு காரணமாக இருந்தது.

(ii) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே 59 கடற்படை கப்பல்கள் மற்றும் 11 கப்பல்கள் காங்கேசன்துறை துறைமகத்திறங்கு வருகை தந்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கடற்படை கப்பலும் வந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்கலன்களுடனான கடற்படை கப்பல்களின் வருகை முறையே 3,604, 3,281, 3,180, 3,287 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கலன்களுடனான கடற்படை கப்பல்களின் வருகை முறையே 3 சதவீதம் மற்றும் 9 சதவீத்தால் குறைவடைந்திருந்தும் மீளாய்வாண்டின் போது 3 சதவீத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே C.I.C.T இறங்குதுறைக்கு வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டின் போது 1,027 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அது 1,146 வரை அதிகரித்திருந்ததுடன் துறைமுக அதிகார சபை யின் ஜயா கொள்கலன் இறங்குதுறை சமகி கொள்கலன் இறங்குதுறை, கிழக்கு கொள்கலன் இறங்கதுறை என்பவற்றிற்கு கொள்கலன் கப்பல்களின் வருகை 2021 ஆம் ஆண்டின் போது 1,286 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது 1,304 வரை அதிகரித்தல் காணப்பட்டது. மேலும் S.A.G.T இறங்குதுறைக்கு வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டின் போது 867 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அது 837 வரை குறைவடைந்திருந்தது.

**சந்தைப்பங்கு**

2022 ஆம் ஆண்டிற்காக உலக துறைமுகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட எல்பா லயினர் அறிக்கைக்கு (Alpha Liner Report) இணங்க கொழும்பு துறைமுகம் இருபதாவது கமனான அலகுகள் (Twenty Equuvalent Unit) 6,862,178 இன் செயற்பாடுகளை மேற்கொண்டு உலகத்தில் 22 ஆவது இடத்தில் இருப்பதுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.3 சதாவீதமானது பின்னடைவை காட்டியிருந்தது. இலங்கை துறைமுக அதிகாரச பையின் கொள்கலன் நகர்தல் 2021 ஆம் ஆண்டின் போது கொள்கலன் இருபது அலகு 2,198,334 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அந்த கொள்கலன் இருபது

அலகு 1,925,895 வரை 5 சதவீத்தால் குறைவடைந்திருந்தது. மேலும் கொழும்பு துறைமுகத்தில் துறைமுக அதிகார சபையின் கொள்கலன்களை செயற்படுத்தும் இயலளவு 2001 ஆம் ஆண்டின் போது கொள்கலன் இருபது அலகு 1,396,946 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போத அந்த கொள்கலன் இருபது அலகு 1,925,895 வரை 81 சதவீத்திலிருந்து 28 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

எவ்வாறாயினும் கொழும்பு துறைமுகத்தில் போட்டியாக செயற்படுகின்ற தனியார் கம்பனியான S.A.G.T நிறுவனத்தின் கொள்கலன் இருபது அலகு 229,670 இலிருந்து கொள்கலன் இருபது அலகு 1,749,809 வரை அதாவது 19 சதவீத்திலிருந்து 51 சதவீதம் வரை படிப்படியாக அதிகரித்து மீளாய்வாண்டளவில் 26 சதவீதம் வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. C.I.C.T நிறுவனம் 2013 ஆம் ஆண்டின் போது கொள்கலன் இருபது அலகு 57,541 இலிருந்து 2022 ஆம் ஆண்டளவில் கொள் கலன் நகர்த்தல் அலகு 3,184,053 வரை அதாவது 01 சதவீத்திலிருந்து 46 சதவீதம் வரை வேகமான அதிகரிப்பினை அடைந்திருந்தது. அதற்கிணங்க துறைமுகத்தின் பிரதான செயற்பாடாகிய கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கையானத துறைமுக அதிகார சபையிடமிருந்து படிப்படியாக தளர்ந்து தனியார் துறையினால் சொந்தமாக்கி கொள்ளப்பட்டு வருகின்றது என அவதானிக்கப்பட்டது.

### 3.1 முகாமைத்துவ செயற்தினின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் 25 பிரிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் விபரத்திற்கு இணங்க 86 பதவிகள் தொடர்பான அங்கீகரித்த பதவியணியினரை மிகைத்து 914 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அதிகார சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக (Operations) நேரடித் தொடர்பினைக் காட்டுகின்ற பிரிவுகளில் 726 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அதிகார சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்பினைக் கொண்டிருக்காத 10 பிரிவுகளின் ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது மேலதிக நேரவேலைப் படியாக ரூபா 924 மில்லியனை உள்ளடக்கி அதிகார சபையின் ஒட்டுமொத்த மேலதிக நேர வேலைப்படி ரூபா 11,968 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அதிகார சபையின் ஊழியர் எண்ணிக்கையாக 9990- அங்கீகரித்திருந்தது. பல பதவிகள் ஒன்றிணைக்கப்பட்டு புதிய பதவி உருவாக்கப்பட்டிருந்தமையும் அப்பதவிழகளுக்கு ஊழியர்கள் சேர்த்தக் கொள்ளப்படாமையும் காரணமாக 2021-12-31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 8507 வரை குறைவடைந்திருந்தது. அத்தியசியமாக நிரப்ப வேண்டிய வெற்றிடங்களை உள்ளகரீதியாக நிரப்பும் போது சில பதவிகளுக்காக மேலே கூறப்பட்ட மிகையாக கருதப்படுகின்ற பதவிவகிப்பவர்களுக்கு விண்ணப்பிக்க கூடியதாக இருந்த போதிலும் பல பதவிகளக்காக அவர்கள் விண்ணப்பிப்பதற்கு இயலுமை இல்லாததுடன் அவ்வாறான பதவிகளுக்காக வெளியிலிருந்து சேர்த்தக்கொள்ள வேண்டியிருந்தது. | முகாமைத்துவத்தினால் பதவியணியினரை வினைத்திறனாக சேவையில் ஈடுபடுத்தி மேலதிக நேர வேலைச் செலவினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிக நேர வேலையை ஏற்கனவே அங்கீகரித்தல் மற்றும் வேலைகளின் அறிக்கையை பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 04 ஆந் திகதி ஒரு கப்பல் கொழும்பு துறைமுகத்தில் ஐய கொள்கலன் இறங்குதுறையில் மோதியதனால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக ஐய கொள்கலன் | இந்த விபத்தினால் சேதமடைந்த வேகத்தடுப்பு (Fenders) புனரைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏனைய திருத்தம் செய்யும் | நட்டயீடாக பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்பீட்டுப் பணத்தை பயன்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | இறங்குதுறையில் நீர் தடுப்பு (Caisson) வேகத் தவிர்பு (Fenders) துறைமுக மேடைச்சுவர் (Quay wall) முதலியவற்றிற்கு சேதம் ஏற்பட்டிருந்தது. அச்சேதங்கள் ரூபா 315.90 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்கூறிய சேதத்திற்காக ரூபா 384.42 மில்லியன் பணம் 2019 திசெம்பர் 30 ஆந் திகதி அதிகார சபைக்கு கிடைத்திருந்தும் வேகத் தடுப்பினைத் தவிர்த்து ஏனைய திருத்தங்களைச் செய்யும் நடவடிக்கை இது வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவையான இயந்திர உபகரண வசதிகள் எங்களிடம் இல்லாததனால் அதனை வெளி ஒப்பந்தக்காரர்களை தொடர்பு படுத்துவதன் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் ஜய கொள்கலன் இறங்குதுறையில் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக உரிய பிரிவில் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நாட்டில் காணப்படுகின்ற பாதகமான பொருளாதார சூழ்நிலையினால் செயற்பாட்ட நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. | பொருத்தமான வகையில் திட்டமிட்டு உரிய திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுற்றுப்புற வளவு வாடகை கடன்பட்டோர் மீதியினுள் காணப்பட்ட NFCL PENNA port storage (Pvt) Ltd கடன்பட்டோரின் குத்தகை உடன்படிக்கை “இருதரப்பினர்களினாலும் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல்” அடிப்படையில் 2022 பெப்வரி 25 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க இரத்துச் செய்யப்பட்டு 2022 நவம்பர் 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க மிண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதந் பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க குத்தகை உடன்படிக்கையை மீண்டும் அமுல்ப்படுத்தும் போது உரிய கம்பனியால் அதிகார சபைக்கு ரூபா 30 மில்லியனை செலுத்தி கடன்பட்டோர் மீதியினை தீர்த்துவைப்பதற்கு தீர்த:துவைக்கப்பட்டிருந்தும் பெறவேண்டிய மொத்த பணமாகிய ரூபா 95 மில்லியன் இன்னும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2022-11-30 ஆந் திகதிய PAM/237/2022 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க NFCL PENNA PORT STORAGE (PVT) LTD (சிங்ஹ சீமெந்தி கம்பனி) ஆல் செலுத்த வேண்டிய ரூபா 95,032,359.32 நிலுவைப் கபணத்தில் ரூபா 18,000,000.00 உடன் பிணைவைப்பாக ரூபா 12,000,000.00 என்ற வகையில் ரூபா 30,000,000.00 தொகை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்துமாறு 2023--04-10 ஆந் திகதி கம்பனிக்கு தெரியப்படுத்தப்பட்டது. ரூபா 30,000,000.00 தொகையினை மாத்திரம் அறவீடு செய்வாற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் மொத்த நிலுவைப் பணத்தில் ரூபா 18,000,000.00 கழித்ததன் பின்னர் மிகுதி நிலுவைப் பணமாகிய ரூபா 77,032,359.82 பணத்தை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு கணக்காய்வுக் குழு அங்கீகாரம் மற்றும் பணிப்பாளர் சபை அங்கிகாரம் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததன ால் கணக்குகளில் செம்மையாக்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை<br>. | நிலுவையான குத்தகை வாடகையினை அறவீடு செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொளடளல் அல்லது பணத்தை அறவவீடு செய்தல் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக அதகார சபையின் சட்ட பிரிவிற்கு அனுபபிவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள துணைக்கம்பனியான லங்கா கேஸ் டேர்மினல் கம்பனியில் செயற்பாட்ட நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை என அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 15 ஆந் திகதி வரையும் இக்கம்பனியின் மிகுதி செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக முகாமைத்துவத்தினால் தீர்மானம் எடுத்து அதற்கிணங்க செயற்படவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. இக்கம்பனியை கணக்குகளிலிருந்து நீக்குபுவதற்கும் மிகுதி நடவடிக்கைகள் சம்பந்தமாக துறைமுக அதிகார சபையினால் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அக்கம்பனி தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மிகவும் விரைவாக மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதி செயற்பாட்டு நடைமுறைக் கோவையின் 9.3.1 ஆம் பிரிவிற்கு இணங்க அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செயடவது சதம்பந்தமாக நேரடியாக அல்லது தற்செயலாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அவை நிலுவைப் பணம் என மாற்றுவதற்கு இடமளிப்பதில்லை என்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்காக அனைத்து அக்கறைகளும் காட்டுதல் வேண்டும். எவ்வாறாயினும் சுற்றாடல்/1/1/156/B ஆம் இலக்க தகவல் கடிதத்திற்கு இணங்க கொழும்பு துறைமுகத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாற ரூபா 155.9 மில்லியன் நிலுவையான சுற்றாடல் வாடகை மீதி காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் நிதிப் பிரிவின் அறிக்கைக்கு இணங்க பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 197.1 மில்லியனாகும். அதற்கிணங்க நிதிப்பிரிவு மற்றும் சுற்றாடல் பிரிவினால் வழங்கிய தகவல்களுக்கிடையே ரூபா 41.2 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2022-12-31 இல் உள்ளவாறு நிதிப்பிரிவின் அறிக்கைக்கு இணங்க நிலுவையான சுற்றாடல் குத்தகை வாடகை மீதி ரூபா 197,079,282 சரியானதுடன் கணக்காய்வு ஐயவினாவினால் வழங்கப்பட்டுள்ள விபத்திற்கு இணங்க 2022-12-31 இல் உள்ளவாறான மீதியாக காட்டப்பட்டுள்ள ரூபா 155,912,330 மீதி உருவாகியுள்ளதானது பல்வேறு திகதிகளுக்குரிய விலைப்பட்டியல் மீதிகளைக் கொண்டிருந்ததனால் ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தற்பொழுது காணப்படுகின்ற நிலுவைப் கபணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக செயற்பட வேண்டிய முறைமையை காட்டி சுற்றாடல் பிரிவும் நிதிப்பிரிவும் இணைந்து ஒரு திட்டத்தினை தயாரித்து வருவதுடன் அதனை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிலுவைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கணக்காய்வு செய்த ஆண்டில் மேலே குறிப்பிட்ட 21 கடைகளின் குத்தகை உடன்படிக்கையையும் 2023 ஆம 03 ஆந் திகதி கடிதத்தின் மூலம் வழங்கிய தகவல்களுக்கு இணங்க இன்னும் 03 கடைகளை உள்ளடக்கிய 24 கடைகளின் குத்தகை உடப்படிக்கைகளையும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நாளதுவரையாக்குலவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிட்ட கடைகளுக்கு மத்தியில் 16 கடைகளுக்காக குத்டதகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மிகுதி 08 கடைகளுக்காக மிகவும் விரைவாக உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக குத்தகை உடன்படிக்கையினை நாளதுவரையாக்கி பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அதிகார சபையினால் குத்தகைதாரர்களுடன் குத்தகை உடன்படிக்கையின்றி முதலீட:ட ஆதனமாக பேணப்பட்டு வருகின்ற 10 காணித்துண்டுகள் அவதானிக்கப்பட்டதுடன் குத்தகை உடன்படிக்கை இல்லாமையானது சட்ட தேவைப்பாட்டின் போது | டிஸ்டலரீஸ் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கிய சுற்றாடலுக்கு அருகாமையில் அமைந்திருந்த இச்சுற்றாடல் அவர்களினால் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டதுடன் | முறைப்படியாக குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபைக்கு சிக்கலாக அமையும் | தற்பொழுது கம்பனியால் பயன்படுத்தப்படாததனால் குத்தகை உடன்படிக்கையினை செய்துகொள்ளல் அத்தியவசிமற்றதுடன் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு நீண்ட காலமாக அதிகார சபையின் கட்டிடத்தினை பேணிவருவதுடன் ரூபா 614,560 மாதாந்த குத்தகை வாடகை செலுத்தப்பட்டிருந்தும் குத்தகை உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. INSEE CEMENT கம்பனியுடனும் குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஏ) | அதிகார சபையினால் குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது ஏஊனைய வினைத்திறனான செயற்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்த போதிலும் ரூபா 3,997 மில்லியன் பெறுமதியான 05 காணித்துண்டுகள் இதுவரை எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்தாது காணப்படுகின்றது என 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அவதானிக்கப்பட்டது. | டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள கரி கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்திற்கு இணங்க நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்வதற்கு ஏற்படும். கொம்பனி வீதியில் அமைந்துள்ள கியுவீதி காணி மற்றும் மோகன' வீதியில் அமைந்துள்ள காணி ஆகிய காணிகள் பேரே குளத்திற்கு அருகாமையிலான அபிவிருத்தி திட்டம்அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. மஹர கல்வலயில் அமைந்துள்ள காணியின் கலப்பு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக அமைச்சரை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | உரிய காணியை விளைவற்றதாக பேணாது வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஐ) | 2022 மே 26 ஆந் திகதிய சுற்றாடல்/4/நானாவித ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அதிகார சபையிடம் 635 உத்தியோகபூர்வ இல்லங்கள் சபைகள் காணப்பட்டதுடன் 2022 காணப்பட்டதுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குடியிருத்தல் 05 ஆண்டுகளை (2018 ஆம் ஆண்டிற்கு முன்னர்) மிகைத்த 399 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 05 ஆண்டுகளுக்குள் (2018-2022) வழங்கிய 205 உத்தியோகபூர்வ இல்லங்களுடன் மொத்தமாக 604 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 31 உத்தியோகபூர்வ இல்லங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | இலங்கை துறைமுக அதிகார சபையின் 635 உத்தியோகபூர்வ இல்லங்களில் உயர்முகாமைத்துவத்தின் உத்தியோகபூர்வ இல்லங்கள் நிறைவேற்று உத்தியோகத்தர் இல்லங்கள் விளையாட்டு சமூக நலன்புரி இல்லங்கள் போனற்ன திருத்தம் செய்ய வேண்டியுள்ள இல்லங்களாகும். எவ்வாறாயினும் வீடுகள் வெற்றிடமாகுகையில் அந்த அனைத்து இல்லங்களையும் துரிதமாக வேண்டுபவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய உத்தியோகபூர்வ இல்லங்களை சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்துதல் வேண்டும். |

(ஒ) காணி தொடர்பான கணக்காய்வு

| | | | |
|---|---|---|---|
| (i) | LS/MIS/344 ஆம் திட்ட வரைபட இலக்க கெனல் நிலையம் (மேற்கு) கொழும்பு 01 பிரதான வீதிக்கும் ஒல்கொட் மாவத்தைக்கும் எல்லையான 947.5 மில்லியன் பெறுமதியான 02 ஏக்கர் காணி சுங்கத் திணைக்களத்திற்கு ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் சட்டரீதியாக அக்காணியை ஒப்படைப்பதற்கு மற்றும் பெறுமதியை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு இந்த அறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் இதுவரை பதில் வழங்கியிருக்கவில்லை. | முறையான நடைமுறைக்கு இணங்க இணக்கப்பாட்டிற்கு வந்து காணியை ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு உரிய சொத்தை புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | CO/COL/2012/1047 ஆம் திட்ட வரைபட இலக்க கொழும்பு 10 டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள ரூபா 628.5 மில்லியன் பெறுமதியான 02 ஏக்கர் 03 ரூட் 9.61 பேச்சர்ஸ் அளவான காணி தாமரை கோபுரத்தினை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பயன்படுத:துவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தும் முறையான நடைமுறைக்கு இணங்க பெறுமதியை பதிவேட்டிலிருந்து நீக்கி உரிமை உறுதியின் மூலம் காணி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் இதுவரை பதில் வழங்கியிருக்கவில்லை. | முறைப்படியாக காணியை ஒப்படைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு உரிய சொத்துக்களை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | S/P/183F ஆம் திட்டவரைபட இலக்க தோட்டம் 601 சிவில் சீ பெரேரா மாவத்தையில் அமைந்துள்ள 83.723 மில்லியன் பெறுமதியான 01 ஏக்கர் 02 ரூட் 14.9 பேச்சஸ் அளவான காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் சட்டரீதியான பரிமாற்றம் செய்யும் நடவடிக்கை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முடிவடைந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அதிகாரசபையின் காணியின் பெறுமதி ரூபா 83.723 மில்லியனால் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத:துவம் இதுவரை பதில் வழங்கியிருக்கவில்லை. | காணியை ஒப்படைத்ததன் பின்னர் பரிமாற்றம் செய்யும் நடவடிக்கையை சட்டரீதியாக முடிவுறுத்தி உரிய காணியை காணிப்பதிவேட்டியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்றினின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வடக்கு கிழக்கு நுழைவாயில் வலய எண்ணக்கருவினை அடைந்து கொள்ளும் குறிக்கோளில் காங்கேசன்துறை | இணங்கிக்கொள்ளவில்லை. 2018 சனவரி 10 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய EXIM | நடைமுறைச் சொத்தியமான வகையில் திட்டங்களைத் |

| | | |
|---|---|---|
| துறைமுகத்தை மறுசீரமைப்புச் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய எஸ்கஜம்வங்கிக்குமிடையே அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 45.27 மில்லியன் கடன் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு 2018 சனவரி 10 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டது. எனினும் அக்கடன் அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 16.23 மில்லியனான மிகைப் பணத்துடன் அ.ஐ.கு டொலர் 61.5 மில்லியன் வரை அக்கடன் பணத்தை அதிகரிக்கச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்டளப்பட்டிருந்தும் இந்திய அரசாங்கம் அதனை அங்கீகரிக்கவில்லை. கடன் உடன்படிக்கை கையொப்பமிட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்தும் துறைமுகத்தின் நிர்மாண நடவடிக்கை இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன் பணத்தில் அ.ஐ.கு. டொலர் 0.905 மில்லியன் (அ.ஐ.கு. டொலர் 905,194.38 ) மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்படாத கடனுக்காக கடப்பாட்டு கட்டணமாக (Commitment Changes) அ.ஐ.கு டொலர் 21,139.78 (ரூபா 5,838,633.73 ) பணம் மற்றும் கடன் வட்டியாக அ.ஐ.கு டொலர் 20,937.57 (ரூபா 6.1 மில்லியன்) பணமும் அதிகார சபையினால் சிக்கனமற்ற வெசலவாக செலவு செய்யப்பட்டிருந்தது. | வங்கிக்குமிடையே கையொப்பமிடப்பட்ட டொலர் கடன் நிவாரண உடன்படிக்கைக்கு இணங்க பொறுப்புக் கட்டணமும் வட்டியும் இலங்கை அரசாங்கத்தினால் EXIM வங்கிக்கு செலுத்த வேண்டும். இக்கொடுப்பனவை செலுத்துமாறு வெளிநாட்டு வழங்கள் திணைக்களம் சிபாரிசு செய்து சமர்ப்பித்ததன் பின்னர் உரிய பொறுப்புகட கட்டணத்தையும் வட்டியையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் இலங்கை துறைமுக அதிகார சபையின் பொர்றுப்பானதுடன் அது இலங்கை கணக்கீட்டு துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாகும். | தயாரிக்காமையும் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தாமையால் கடப்பாட்டு கட்டணம் மற்றும் விலை முரண்கள் போன்ற சிக்கனமற்ய செலவுகளை மேற்கொள்ளவேண்டி இருந்ததனால் திட்டங்களை முடியுதமான அளவிற்கு நடைமுறைச் சாத்தியமாக இருத்தல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அதிகார சபை 2022 ஆம் ஆண்டில் ஆரம்பித்த வீதி நிர்மாண ஒப்பந்தம் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் மனனெகும வீதி நிர்மாண உபகரணக் கம்பனிக்கும் (Maga Neguma Road Construction Equipment Company) இடை ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 1.6 ஆம் பிரிவிற்கு இணங்க இரு தரப்பினர்களும் இணக்கிக் கொண்ட ஏனைய முறைமை இல்லையாயின் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் கடிதம் கிடைத்ததன் பின்னர் 28 நாட்களுக்கள் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி கையொப்பமிடப்பட | செயற்திட்டத்தின் ஒப்பந்தத்திற்குரிய ஒப்பந்தக்காரர்ருக்கு ஒப்படைத்ததன் பின்னர் ஒப்பந்த உடன்படிக்கை தயாரிக்கப்படும் அந்த உடன்படிக்கையின் திட்டம் அதிகார சபையினட சட்டப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தீருத்தங்களை உள்ளடக்கி மீண்டும் சட்டப் பிரிவினூடாக பதவிநிலை உத்தியோகத்தர்களின் அங்கிகாரத்திற்னுகு அனுப்பிவைக்கப்படும். அதன் | நிர்ணயிக்கப்பட்டவாற துரிதமாக ஒப்ந்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த து. அதற்கிணங்க ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக தாமதம் 122 நாட்கள் ஏற்பட்டிருந்தது. | பின்னர் ஒப்பந்தக்காரருக்கும் துறைமுக அதிகார சபைக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். கொரோனா ஆபத்து காணப்பட்ட காலப்பகுதியில் துறைமுக அதிகார சபையினை உள்ளடக்கிய அனைத்து அரசாங்க நிறுவனங்களும் ஆகக்குறைந்த ஊழியர் எண்ணிகையுடன் செயற்பட்டிருந்தது. அந்த காரத்தினால் உடன்படிக்கை செய்து கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. | |
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் 4.14 ஆம் பிரிவிற்கு இணங்க ஒப்பந்தக்காரரினால் மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கையை தயாரித:து இரண்டு பிரதிகளுடன் அதிகார சபையின் பொறியியாளரக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டத்தின் மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கையினை அதிகார சபைக்கு சமர்ப்பித்திருக்காததுடன் இந்த ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு 18 மாதங்கள் கடந்திருந்தும் மாதாந்த செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டம் 03 மாதங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. முறைப்படியாகத் தயாரிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தை தொடர்ச்சியாக நடத்தாமை இந்த ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்தல் தாமதமடைந்தமைக்கு காரணமாக இருந்தது. | இச்செயற்திட்டத்தினை மேற்கொள்ளும் போது செரண்டிப் மா உற்பத்திச்சாலைக்கு (Serendib Flour Mills) தமின்சாரத்தை எடுத்துவரும் பிரதான மின் வழங்கல் பழுதடைந்ததனால் உற்பத்தி த டைப்பட்டிருந்தது. மீண்டும் கொண்டுவருவதற்கு துறைமுக அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது. இந்த மின்சார வயருக்கு சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கு அதிக அளவில் துறைமுக அதிகார சபையின் மின்சாரப் பிரிவின்ட மேற்பார்வையின் கீழ் மாத்திரம் உரிய கேபல் கட்டி எழுப்பப்படும். வேலை தவணை பதிவேட்டிற்கு இணங்க வேலை ஊழியர்கள் அழைக்கப்படுவதனால் மற்றும் அதற்காக தேவையின் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் அளவு குறைவடைந்தமையும் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் உருவாகிய பயண மட்டுப்பாட்டினாலும் மேற்கூறிய நடவடிக்கைக்காக அதிக காலம் எடுக்கும். | முறைப்படியாக செயல்முன்னேற்ற அறிக்கையை உரிய கால எல்லைக்குள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஒப்பந்தக்காரரினால் 2021 மே 19 ஆந் திகதி சமர்ப்பித்த திருத்திய ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்மத்தை 2022 சனவரி 30 ஆந் திகதி முடிவுறுத்த வேண்டிய போதிலும் செயற்திட்டத்தினட நிர்மாண நடவடிக்கைகள் 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு 02 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு செய்யப்பட்டதுடன் அதற்கான மேலதிக நடவடிக்கைகள் கொரோனா தொற்று டீநோய் நிலைமை ஏஉழியர்கள் கொரோனா நோய்க்கு உள்ளாகியமை தனிமைப்படுத்துதல் என்பன | அனைத்து செயற்திட்டங்களையும் ஒப்பந்த காலத்திற்கள் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 ஆந் திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னற்றம் 21.2 சதவீத அளவில் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் செரண்டிப் மா உற்பத்திச்சாலைக்கு மின்சாரத்தை வழங்கும் பிரதான மின்வழங்கல் பழுதடைதல் முன்னர் இனஙட்காணப்படாத நீர் வழங்கல் குழாய் எண்ணை எடுத்துச் செல்லும் குழாய் நீர், பாய்ந்து செல்லும் வடிகாள் முறைமை என்பவற்றிற்காக மேலதிக காலம் எடுத்துள்ளது. | |
| (iv) | ஒப்பந்தக்காரினால் செயற்திட்டத்தை பூர்த்திசெய்யும் காலம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க செய்றதிட்டம் 2022 யூன் 30 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அக்காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் நாளதுவரையாக்கப்பட்ட அமுல்ப்படுத்துதல் திட்டத்தை (Updated implementation Plan) ஒப்பந்தக்காரர் அதிகார சபைக்கு வழங்கியிருக்காததுடன் அவ்வாறான திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கும் அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தை பூர்த்திசெய்யும் காலத்தை நீடிப்பது தொடர்பாக (Time Extension) ஒப்பந்தக்காரருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் நாளதுவரையாக்கப்பட்ட அமுல்ப்படுத்துதல் வேலைத்திட்டங்கள் அதிகார சபையினால் வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத்திற்கு இடையில் ஏற்படும் மேலதிக நிச்சயமற்ற வேலைகள் மற்றும் ஒப்பந்த மூலப் பொருட்களின் அதிக விலை அதிகரிப்பினால் ஒப்பந்த வேலைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதன் காரணமாக அவ்வாறு வேண்டிக் கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு முடியாதுள்ளது. | செயற்திட்டம் காலம் நீடிப்புச் செய்யப்படுமாயின் உரிய நாளதுவரையாக்கப்பட்ட அமுல்ப்படுத்துதல் திட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் வாயில் கதவுகள் மற்றும் பண்டசாலைகளுக்காக CCTV கமராக்களைப் பொருத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை ரூபா 960 மில்லியன் அதகார சபையின் வருடாந்த பாதீடில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்ட பணம் வேறு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையும் CCTV கமராக்களை பொருத்தும் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | பல கட்டங்களின் கீழ் துறைமுக நுழைவு வாயில் கதவுகள் அனைத்தையும் சில CCTV கமரா முறைமையின் மூலம் உள்ளடக்குவதற்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது வாயில் கதவு இல்க்கம் 1, 2, 3 , 4, 5 மற்றும் 8 இற்காக CCTV கமரா முறைமையை பொருத்துவதற்கு ரூபா 10 மில்லியன் பணம் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் தற்பொழுது இல்லக்கம் 1A, 1, 2, 3 மற்றும் 6 ஆகிய வாயில் கதவுகளுக்காக CCTV கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. | அதிகார சபையின் பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமான இவ்வாறான செயற்திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஐய கொள்கலன் இறங்குதுறைக்காக ECT இல் பொருத்தப்பட்டு அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இறங்குதுறையின் செயற்பாட்டு இயளலவினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக 12 பாரிய அளவிலான கிரேன்கள் (STS Cranes) மற்றும் புகையிரத தண்டவாளங்கள் மீது பொருத்திய சுயமாக செயற்படும் 40 (ARMG Cranes) கென்ட்ரீ கிரேன்களை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தக்காரருடன் அ.ஐ.கு டொலர் 282.56 மில்லியன் வழங்கல் ஒப்பந்தம் 2021 திசெம்பர் 18 ஆந் திகதி வழங்கப்பட்டு 2021 திசெம்பர் 20 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணம் அ.ஐ.கு டொலர் 56.51 மில்லியன் ஒரே தடவையில் 2022 சனவரி 20 ஆந் திகதியளவில் செலுத்த வேண்டிய போதிலும் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அது பகுதிபகுதியாக 2022 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனால் கிரேன்களின் உற்பத்தி நடவடிக்கை தாமதித்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | ECT இன் துணைக்கருவிகளுக்காக செலுத்த வேண்டிய முற்பணமான அ.ஐ.கு டொலர் 56.51 மில்லியன் 2022-08-24 ஆந் திகதியும் முற்பணங்களுக்கு மேலதிகமாக முதலாவது தவணைப் பணமான அ.ஐ.கு டொலர் 56.51 மில்லியன் 2023-03-17 ஆந் தகிதி செலுத்தப்பட்டிருந்ததுடன் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு 20 சதவீத செயல்முன்டேனற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. | அதிகார சபையின் செயலாற்றலுக்கு முக்கியமான இவ்வாறான செயற்திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையின் மூலம் தற்பொழுது பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற ஐய கொள்கலன் இறங்குதுறையின் (JCT) நீளம் 600 மீற்றர் அளவானதாக இருப்பதனால் அந்த இறங்குதுறையை 120 மீற்றரினால் நீடிப்புச் செய்வதற்கும் ஆழம் 15 மீற்றராக கப்பல் தளத்தினை தயார்படுத்துவதற்கும் 2017 யூலை மாத்தின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 நவம்பர் 29 ஆந் திகதி சீனக்கம்பனியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்கிரயம் ரூபா 5,035.30 மில்லியனாகும். (VAT இல்லாது) உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக செயல்முன்னேற்றம் 42 சதவீதம் மாத்திரமாகும். | ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க 2020 ஏப்ரல் 09 ஆந் திகதி செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் பின்னர் கொவிட் -19 நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட நிலைமையின் காரணமாக 2022 யூலை 23 ஆந் திகதியில் செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்காக இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மீண்டும் 2023 யூலை 31 ஆந் திகதி வைர செயற்திட்டத்தின் கால எல்லையை நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 யூலை 07 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக செயல்முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்தது. | அதிகாரசபையின் செயலாளற்றல் முக்கியத்துவமான இவ்வாறான செயற்திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2006 அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3.2 (ஆ), 2.3.2 (இ), 2.6.1 (அ)(ii), 5.1.1.(அ) மற்றும் 5.2.1 (அ) பிரிவுகளுக்கு இணங்க பெறுகைச் | மத்தியப்படுத்தப்பட்ட சமையலைப்பிரிவினால் 2022 ஆம் ஆண்டின் போது அதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளக்கு இணங்க பெறுகைச் செயற்பாடுகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தரால் பொருள் விபரக் குறிப்பினை உள்ளடக்கி கேள்வி ஆவணங்களின் வரைபினை தயாரித்தல் அவற்றினை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பித்தல் செய்யப்பட வேண்டியதுடன் பொருள் விபரக் குறிப்பினை மீளாய்வு செய்தல் அங்கீகரித்தல் மதிப்பீட:டுக் குழுவினால் செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் சம்யலறையின் உணவு பதிவு செய்தல் வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யும் போது மேற்கூறிய ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கேள்விச் சபை மற்றும் மதிப்பீட்டுக் குழுவினை நியமித்து தேவையான பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருந்தும் கடிதத்தில் குறிப்பிட்டவாறு பொருள் விபரக் குறிப்பினை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களின் வரைபினைத் தயாரித்தல் அவற்றினை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கிகரிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கும் நடைமுறை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் மீனுக்காக மாத்திரம் சில பொருள் விபரக் குறிப்பு எல்லை காட்டப்பட்டிருந்தது. இது அரசாங்க பெறுகை நடைமுறைக்கு முரணானது என ஏற்றுக்கொள்வதுடன் அது எங்களின் தாமதமாகும். 2023 ஆம் ஆண்டிலிருந்து மத்தியப்படுத்தப்பட்ட சமயலறைப் பிரிவிற்கான அனைத்து கொள்வனவுகளும் வழங்கல் பிரிவினுாடாக இடம்பெறுவதனால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க உரிய நடைமுறைகள் எதிர்காலத்தில் சரியாக மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | தேசிய பெறுகை முகவராண்மையினால் வழங்கப்பட்ட பெறுகைச் செயற்பாட்டுக் கோவையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைகளை மேற்கொள்ளும் போது அதற்கிணங்க அமைச்சின் மேலதிக செயலாளரினால் வழங்கப்பட்ட பெறகைக்குழுவினை நியமிக்கும் கடிதத்தின் பிரகாரம் பெறுகைக்குழுவினை நியமித்து கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 2022 சனவரியிலிருந்து யூன் மாதம் வரை முறையே ரூபா 44.9 மில்லியன் மற்றும் ரூபா 29.1 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த கோழி இறைச்சி மற்றும் முந்திரிகை பருப்பு கொள்வனவின் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலே (அ) பந்தியில் குறிப்பிட்டவாறான நடைமுறையானது சமயலறைப் பிரிவில் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படாதிருந்ததுடன் ஊழியர்களுக்கு அங்கீரித்த உணவுப் பட்டியலுக்கு இணங்க கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டிலிருந்து வழங்கல் பிரிவின் மூலதம் அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதனால் அறிக்கையில் குறிப்பிட்ட குறைபாடுகள் சரிசெய்யப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையின் நிருவாக செயற்பாட்டு ஒழுங்குபடுத்தல் கோவையின் (X) ஆம் அத்தியாயத்தின் III ஆம் பகுதியில் சமயலறைப் பிரிவில் பொருட்களை கொள்வனவு செய்யும் நடைமுறையின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் முடியுமான அளவில் | இதன் போது உயர்ந்த தரத்தினைக் கொண்ட (High quality) மற்றும் அதிக சுகாதாரமான (Hygiene) பேக்கரி உணவுகளை பெற்றுக்கொள்ளும் இயலுமையை கவனித்துப் | அதிகார சபையின் நிருவாகச் செயற்பாட:டுக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போட்டி விலையைக் கவனித்துப் பார்த்து அரசாங்க திணைக்களங்களிடமிருந்து அரசாங்கத்தின் வியாபார நிறுவனங்களிலிருந்து அல்லது கூட்டுத்தாபனங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் சிற்றுண்டிகளை வழங்கும் நடமுறையின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பார்த்து பேக்கரி விடயங்களின் உற்பத்தி நடவடிக்கைகளை வெளிவாரியான ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்படை தன்மையுடனான நடைமுறையினைப் பின்பற்றுவதற்கும் முகாமைத்துவக் குழு தீர்மானம் எடுத்திருந்தது. | |
| (ஈ) | 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 14(2) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் நிதி முகாமையாளரினால் செலவுகள் தொடர்பான அனைத்து நிதி தாக்கங்களையும் காட:டகின்ற நிதிப் பகுப்பாய்வு சமர்பிக்கப்படுமாகவிருந்தாலே தவிர அதிகார சபையினால் ரூபா பத்து இலட்சத்திற்கு குறையாத பணம் சம்பந்தமாக பணத்தின் தன்மையின் தீர்மானத்தினை எடுக்காதிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மதிப்பீட்டினைச் செய்யாது சிற்றுண்டிச்சாலைகளை வழங்கும் பெறுகையின் போது முன்னர் காணப்பட்ட மாதாந்த விலை மனுக்கோரி பேக்கரி உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறைமைக்குப் பதிலாக அதிகார சபையின் சுற்றாடலுக்குள் ஸ்தாபிக்கப்பட்ட போக்கரியினை ஒரு வெளிநிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் 05 ஆண்டுகள் வரை பேக்கரி உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. மேலும் அதிகார சபையின் மீளாய்வாண்டிற்கான வழங்குனர்கரளை பதிவு செய்யும் நிபந்தனை தொகுப்பின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் பெறுகையின் போது உருவாகும் போட்டியின் பிரதிபலன்களை மீண்டும் 05 ஆண்டுகள் வரும் வரை அதிகார சபைக்கு பெற்றுக்கொள்ளும் இயலுமை இழக்கப்பட்டிருந்தது. | இந்த உணவு வழங்கும் நடைமுறையானது நிச்சயமாக துறைமுக அதிகார சபையின் ஊழியர்களுக்கு தரத்தில் உயர்ந்த பேக்கரி உற்பத்திப் பொருட்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுவதுடன் அதன் போது தொடக்க ஆறு மாதங்களுக்கு சந்தையில் காணப்படுகின்ற விலைக்கு ஒப்பீடாக நியாயாமான விலைக்கு பேக்கரி பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. இந்த தொடக்க விலைகளின் கீழ. ஆறு மாதங்கள் வழங்குனர் சந்தை விலை அதிகரிப்பினை கவனிக்காது பேக்கரி உற்பத்திப் பொருட்களை துறைமுக அதிகார சபைக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் அதன் பின்னர் ஒவ்வொரு ஆறு மாத்ததிற்கும் ஒரு தடவை சந்தையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற விலைகளுக்கு இணங்க இன்னும் ஆறுமாத காலத்திற்காக விலைகளைத் தீர்மானித்தல் இடம்பெறும். இதற்காக துறைமுக அதிகார சபையினால் ஒரு மேற்பார்வைக் குழுவினை நியமிப்பதற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அதிகார சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சிற்றுண்டிச்சாலைகளை வழங்கும் போது சம்பந்தமாக ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் கேள்வி கோரும் ஆவணங்களை கொள்வனவு செய்யும் போது செலுத்த வேண்டிய மீளச் செலுத்தாத கட்டணம் ரூபா 25,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் ரூபா 25,000,000.00 ஆக அச்சுப் பழைகளுடன் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை சரிசெய்து | இப்பெறுகை சம்பந்தமான ஆங்கில மொழி அறிவித்தல் எங்களால் தயாரிக்கப்படுவதுடன் அதன் சிங்களம் மற்றும் தமிழ் மொழி பெயர்ப்பு உரிய பத்திரிகை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற து. சிங்கள மொழியிலான அறிவித்தலில் மிகவும் அதிக அளவிலான மீளச் செலுதாத வைப்பாக அச்சுப் பிழை | பத்திரிகை அறிவித்தலினை வெளியிடும் போது அவைகளின் சரியான தன்மையை மிகவும் கவனித்து பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் ஒரு பிழை இருக்குமாயின் அதனை சரிசெய்தலினை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்ற சிங்கள மொழி அறிவித்தலில் மிகவும் அதிக மீளச் செலுத்தாத வைப்பினைக் காட்டும் வகையில் குறிப்பிடுதல் எதிர்பார்த்த கேள்விதாரர்களை ஊக்கமளிக்காமைக்கு காரணமாக இருந்தது. | காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் வேறு எந்தக் கட்டணமும் செலுத்தாது உத்தேச ஆவணங்களின் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளலாம் எனவும் விசாரிப்பதற்காக தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட்டிருப்பதனாலும் இந்த அசாதாரண பணத்தை சரிசெய்வதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டது. எவ்வாறாயினும் இந்த அச்சுப் பிழையை கவனத்திற்கு உட்படுத்தாது காணப்பட்டது என்பது இணங்கிக் கொள்ளப்பட்டது. | வேண்டும். |
| (ஊ) | சிற்றுண்டிச்சாலைகளை வழங்கும் பெறுகையின் போது வழங்குனர் நிறுவனத்துடன் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை சாதாரண சந்தை விலைக்கு இணங்க திருத்தம் செய்யப்பட வேண்டுமென உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதிகார சபை ஒரு நாளைக்கு பேக்கரி உணவுகள் 4000 அலகுகள் அளவில் கொள்வனவு செய்யும் ஒரு நிறுவனமாக இருந்த போதிலும் பேக்கரி உணவபனது இரட்டை கடிதஉறை முறைமையின் கீழ் கேள்வி கோரப்பட்டு தெரிவு செய்யும் போது விலை பிரதான வரையறையாக இருக்காததுடன் விலைத் திருத்தங்களின் போதும் மொத்த விலை கவனத்தித்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் வகையில் உடன்படிக்கையின் நிபந்தனை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. போக்கரி உறட்பத்தி வகைகளை சந்தையில் விற்பனை செய்கின்ற விலைகளின் ஆய்விற்குரிய பகுப்பாய்வு அறிக்கைக்க இணங்க பேக்கரி உணவுகளின் விலைகளை திருத்தம் செய்வது தொடர்பாக அதிகார சபை மேற்கொண்ட பேக்கரி உற்பத்தி அதிகார சபை மேற்கொண் பேக்கரி உற்பத்தி வகைகளை சந்தையில் விற்பனை செய்கின்ற விலைகளின் ஆய்விற்குரிய பகுப்பாய்வு அறிக்கைக்கு இணங்க பேக்கரி உணவுகளின் 63 வகைகளின் 20 விடயங்களின் சந்தை மொத்த விலையை கருத்தில் கொள்ளாது சில்லறை விலை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை திருத்தம் செய்யும் காலப்பகுதி மற்றும் அதற்கு 10 மாதங்களுக்கு முன்னர் உரிய மூலப்பொருட்களுக்காக காணப்பட்ட விலையை ஒப்பீடு செய்து விலைகள் அதிகரித்தல், சந்தையில் மேற்கூறிய பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்காகசக் காணப்பட்ட விலைகள் முதலியவற்றினையும் கவனத்திற்கு எடுத்துவிலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. ஒரே தடவையில் பேக்கரி உற்பத்தி நிறுவனங்களினால் மொத்தமாக சிற்றுண்டிச்சாலைகளை வழங்கும் உண்மையானதாக இருந்த போதிலும் மத்தியப்படுத்தப்பட்ட சமயலறைப் பிரிவிற்கு வழங்கப்பட வேண்டிய நியம தரத்திற்கு இணங்க சந்தையில் காணப்படுகின்ற அந்த உற்பத்திப் பொருட்களின் நிறையை விட குறிப்பிடதக்க அளவில் அதிக நிறைவேயடன் அந்த உணவுகளை வழங்குதல் மேற்கொள்ள வேண்டியுள்ளதனால் சந்தையின் மொத்த விலை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளல் நியாயமற்றதாகும். | இவ்வாறு பாரிய அளவில் கொள்வனவு செய்யும் போது போட்டி விலையினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான அனத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். |
| (எ) | சிற்றுண்டிகளை வழங்கும் பெறுகையின் போது வழங்குனர் நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 20 ஆம் பிரிவிற்கு இணங்க பேக்கரி உணவுப் பொருட்களுக்காக அதிகார | சமையலறை நடவடிக்கைகளை முறைமைப்படுத்தும் குழுவின் மூலம் பேக்கரி உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் நியமதரம் | உரிய பரீட்சிப்பானது நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையினால் நியமிக்கப்பட்ட நியமதரத்தை பரீட்சிக்கும் குழு (QVC) வின் மூலம் பேக்கரி உணவுகளின் நியமதரம் தொடர்பாக 03 மாதங்களக்கு ஒரு தடவை அல்லது ஏதாவது முறைப்பாட்டின் அடிப்படையில் பரீட்சிப்பதற்கு உட்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 2022 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை அவ்வாறான பரீட்சிப்பிற்கு உட்படுத்தி உரிய குழுவின் அங்கத்தவர்களால் ஒரு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நியமதரத்தை பரீட்சவிக்கும் ஒரு குழுவினை (QVC) துரிதமாக பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரஅ சபைக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனை தொகுப்பின் விசேட நிபந்தனையின் கீழ் 08 ஆவது பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்ற வாகனங்களை பதிவுசெய்த ஆண்டிலிருந்து 08 ஆண்டுகளை மிகைக்காதிருத்தல் வேண்டும். அத்துடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற வாகனம் மினவும் சிறந்த நிலையில் இருக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்த ஆண்டிலிருந்து 08 ஆண்டுகளை மிகைத்த 10 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | பதிவுசெய்த ஆண்டு 08 ஆண்டுகளை மிகைத்திருக்க வேண்டிய போதிலும் நல்ல நிலையில் வாகனத்தை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரருக்கு முடியாதிருந்ததுடன் அவர்கள் கூறியதாவது நாட்டில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள மோட்டாபர் வாகன இறக்குமதியை மட்டுப்படுத்துதல் இதற்கு காரணமாகும் என்பதாகும். எனவே 2022 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்து 18 ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்டு வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு திர்மானிக்கப்பட்டது. | உரிய பதிவுசெய்தல் ஆண்டிற்குள் உட்பட்ட வாகனங்களை மாத்திரம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |